பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் பத்து

விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 20 வெள்ளிக்கிழமை (06-10-2000) தொலைபேசி;- 3378 ஒலி: 291

உள்ளே
பொது அறிவு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

## ★ பொ.ஐ.ஐ.முன்னணி கூட்டத்தில்
# தற்கொலைகுண்டு தாக்குதல்
# 11பேர் பலி;50பேர் படுகாயம்

### மதவாச்சியில் சம்பவம்

[நமது நிருபர்]

**மதவாச்சியில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் போது பதினொரு பேர் கொல்லப்பட்டு, 50 பேர்கள் காயமடைந்துள்ளனர்**

**காயமடைந்தவர்கள் மதவாச்சி வைத்தியசாலையிலும் அநுராதபுரம் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

அநுராதபுரம் மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் திஸ்ஸ கரலியட்டவை ஆதரித்து மதவாச்சி பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே இக்குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஸ்தலத்தில் ஆறுபேர் கொல்லப்பட்டதாகவும் மிகுதி நான்கு பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் இறந்ததாகவும் இதில்ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களில் சிறு காயங்களுக்குள்ளானவர்கள் மதவாச்சி வைத்தியசாலையிலும் படுகாயமடைந்தவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற இரண்டாவது குண்டு வெடிப்புச் சம்பவம் இதுவாகும்.

## காரைநகர் சுற்றிவளைப்பு

காரைநகர்பகுதிபடைப்படையினரால் நேற்றுதிடீரென சுற்றிவளைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டைநடத்தப்பட்டது.

2 மணி தொடக்கம் பி.ப.5.30 மணிவரை மேற்கொள்ளப்பட்ட இச் சுறிவளைப்பின் போது அங்குள்ளமக்கள் அனைவரையும் இயாகராஜ மத்திய மகா வித்தியாலயத்திற்கும் யாழ்ற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியமாகாண முதலமைச்சர் பேர்டிபிரேமலால் உயிர் தப்பினார்

மதவாச்சியில் இடம்பெற்ற இக் குண்டு வெடிப்பு சம்பவத்தின் போது வட மத்திய மாகாண முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸநாயக்கா பேசி முடித்தபின் மேடையை விட்டு இறங்கி வரும் போது பெண் தற்கொலைக் குண்டுதாரி அவ்விடம் செல்ல முற்பட்ட போது பொலிஸார் அவரைச் சோதனை இட்டபோது குண்டு வெடித்ததனால் சோதனை செய்த பொலிஸாரும் இதில் கொல்லப்பட்டுள்ளார்.

இதனால் வட மத்திய மாகாண முதலமைச்சர் இக்குண்டுத் தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பியதாக தெரிவிக்கப்படுகிறது. [வ]

## கஸ்தூரியார் வீதி கிரனேட் வீச்சில் மூவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்கஸ்தூரியார் வீதியில் றொலெக்ஸ் பேக்கரிக்கு அண்மையில் நேற்று மாலை 4 மணியளவில்இடம்பெற்ற கிரனேற்வீச்சில்மூன்று பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் மாணவர்கள்என அறியவருகிறது. கோண்டாவில் லட்டி

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட தேர்தல் குறித்து பலாலி படைத்தளத்தில் ஆராய்வு

(அலுவலக நிருபர்)

இம்மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றதேர்தல் தொடர்பாக யாழ். மாவட்டத்தின் நிலை குறித்து பலாலி இராணுவத் தலைமையகத்தில் விசேட மகாநாடு ஒன்று நேற்று நடைபெற்றது.

இம்மகாநாடு யாழ். குடாநாட்டு தளபதி மேஜர் ஜெனரல்அன்ரன்விஜேந்திரா தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ். அரச அதிபரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான கே. சண்முகநாதன், யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். நடராஜா, வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் பூநாறிமரத்தடியில் கிரனேட் வீச்சு; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் தேர்தல் பிரசாரத்தை முடித்துக்கொண்டு திரும்பி வரும் வழியில் ஈ.பி.டி.பியினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கிரனேட் வீச்சு சம்பவத்தில் மூவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இவர்களில் குணசேகரம் (வயது 21) என்பவர் அதி

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கெதிரான யுத்தம் தொடரும்

## யாழ்.சுகாதாரசேவைகள் பணிப்பாளர்

# புலிகளுக்கெதிரான யுத்தம் தொடரும் தேர்தல் கூட்டத்தில் பிரதமர் சூளுரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அழித்தொழிக்கும் வரை புலிகளுக்கெதிரான யுத்தம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு பிரதம மந்திரி ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்க நேற்று முன்தினம் சிலாபத்தில் நடைபெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் புலிகளை யுத்தத்தின் மூலம் தோற்கடிப்பதனாலேயே இலங்கையின் இனப் பிரச்சினையை தீர்க்க முடியும் என்றதுடன் புலிகளை ஒழிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் யுத்தத்தை ஐக்கிய தேசியக கட்சி ஏன் ஆதரிக்கவில்லை என்றும் அங்கு கேள்வி எழுப்பியுள்ளார்(த-2

### தேர்தல் வன்முறைகளை அடுத்து

# உயர் மட்டத்தலைவர்களுக்கு 20 குண்டு துளைக்காத கார்கள்!

தேர்தலுக்கு இன்னமும் நான்கு நாட்கள் இருக்கையில் கொழும்பு நகரைப் பாதுகாக்க பலத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது:

தேர்தல் நெருங்கிவரும் வேளையில் வன்முறைகள் பெருமளவு தலைதூக்கி உள்ளதால் அரசாங்கம் அவசர அவசரமாக இருபது குண்டு துளைக்காத கார்களினை இறக்குமதி செய்துள்ளது:

இந்த கார்கள் உயர் மட்டத் தலைவர்களின் பாவனைக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த சில நாட்களுக்குள் பொது ஜன ஐக்கிய முன்னணியின்வேட்பாளர்கள்குண்டு வெடிப்பில் அடுத்தடுத்து கொல்லப் பட்டதை அடுத்தே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப் படுத்தப் பட்டுள்ளது. (வ)

## பொலிஸார் மீது நடவடிக்கை

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளை பொலிஸார் ஏற்கமறுத்தால் அது பற்றி பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் முறையிடலாமென பொலிஸ்

(10ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.சுகாதாரசேவைகள் பணிப்பாளர் காரியாலயம்முன் இன்று மறியல் போர்

யாழ் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இன்று நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சையை ஆட்சேபித்து அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சுகாதாரத் தெண்டர்கள் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

மிக நீண்ட காலமாக அரசினர் வைத்திய சாலையில் சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றியோரை விட்டு சொற்பகாலமாககடமையாற்றியவர்களையும், கடமையாற்றாதோரையும்நேர்முகப் பரீட்சைக்கு அழைத்திருப்பதை ஆட்சேபித்தே இந்த மறியல் போராட்டம் இன்று காலை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### அம்பாறை மாவட்டத்தில்

# ரோந்துசென்ற பொலிஸார்மீது தாக்குதல் இருவர் பலி;ஆறுபேர் காயம்

அம்பாறை மாவட்ட குடியேற்ற கிராமமான மத்திய முகாம் பகுதியில் ரோந்து சென்ற பொலிஸ் ஜீப் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு பொலிஸார் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். ஆறு பேர் படுகாயமடைந்

(10ஆம் பக்கம் பார்க்க)

# வ.பி.போ.ச ஊழியர்களின் உண்ணாவிரதப்போர் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியருக்குரிய இடர் காலக் கொடுப்பனவு வழங்கப்படாமையினால் போக்குவரத்துச் சபை ஊழியர்களால் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை புனொட்

[10ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தழ

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இராஜசிங்கம் வீதி, திரு நகரைமுகவரியாகக்கொண்ட மருத்தின்தோபட் ஆகியஎனது தேசிய அடையாள அட்டையும் (இல. 640123494 V) விசேட அடையாள அட்டையும்திருநெல்வேலிச் சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ''வலம்புரி'' காரியாலயத்தில்ஒப்படைக்கவும்.

(கி/ 861)

### வாணி விழா

வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களினால் வாணிவிழா இன்று காலை 10மணிக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைமை அலுவலகத்தில் சிறப்பாகக்கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவில் ஆறுதிருமுருகனின் விசேட சொற்பொழிவும், வேம்படி மகளிர்கல்லூரி மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும்இடம் பெறவுள்ளன.

(வ)

உ

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருஷம்புரட்டாதி மாதம் 21-ம் நாள் (07-10-2000 )சனிக்கிழமை மு.ப. 11-00மணி முதல் 12-00 மணி வரை வரும் சுபவேளையில்,

இல 32, கஸ்தூரியார் வீதியில்

**யோகராஸ் ஆடையகம்**

என்னும் ஸ்தாபனத்தை நாம் ஆரம்பித்து நடாத்த இருப்பதால் அத்தருணம் தாங்களும் சமுகம்தந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி. பத்மகுமார்

(கி - 856)

## உலக சேவை தினம் யாழ். லயன்ஸ் கழகத்தின் சேவை

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மானிப்பாய் மகேஸ்வர இல்லத்தில் எதிர்வரும் 8/10/2000.ம்திகதிஞாயிற்றுக்கிழமைமகேஸ்வரஇல்லச் சிறார்களுக்கு விருந்துபசார நிகழ்வு நடைபெற ஏற்பாடாகிஉள்ளது அன்றையதினம் இல்லச்சிறார்களுக்கு இருவாரங்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் கையளிப்பதும், அன்னதான விருந்தும் நடைபெறும்.

அத்துடன் லயன் டாக்டர் S S; அருளானந்தம் அவர்கள் கண் பல் பாதுகாப்பு' எனும் பொருளில் இல்லச் சிறார்களுக்குசிறப்புரை ஆற்றுவார். இந்நிகழ்வில்யாழ். லயன்ஸ் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

தலைவர், காரியதரிசி

(கி/859)


# தமிழ் மக்களுக்கு எமது வேண்டுகோள்

★ வடக்குக்கிழக்கை இனைத்து திருகோணமலையை தலைநகரமாக்கி ஒரு அரசாங்கத்தை நடத்தியவர்கள் நாங்கள்.

★ எமது பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதற்கு இந்தியாவின் நட்பு என்றென்றும் பேணப்படுவது முக்கியமானதுஎனக்கருதுபவர்கள்நாங்கள்.

★ தமிழ் மக்களின் பிரச்சனைகளின் பரிமாணங்களை, ஆடி அகலங்களை அறிந்தவர்கள் அர்ப்பண உணர்வுடன் செயற்படக் கூடியவர்கள் நாங்கள்.

பேரினவாத படுகொலைகலையும் ஜனநாயகமறுப்பு படுகொலைகளையும் முடிவுக்குக் கொண்டுவரவும் அழிவே வாழ்க்கையாகிவிட்ட எமதுமண்ணில் சமாதானச் சுடரொளியை ஏற்றிடவும் தமிழ்மக்களின் சுயமரியாதை கௌரவத்தை உறுதிப்படுத்தும் தீர்வொன்றை எட்டுவதற்கும் மக்கள் அன்றாடம் எதிர் நோக்கும் போக்குவரத்து, சோதனைச்சாவடிப் பிரச்சனையிலிருந்து வேலைவாய்ப்புப் பிரச்சனைவரை அனைத்திற்கும் நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளைத் துரிதமாகக் காண்பதற்கும் அறிவும் ஆற்றலும் நிறைந்த ஒரு தலைமைகு வாக்களியுங்கள்.



குறிப்பு:- வானம்பாடி ஒலிபரப்புச் சேவையில் இரவு 8.00 மணிக்கு வரதராஜப் பெருமாள் அவர்களின் உரையை நீங்கள் கேட்கலாம்.



## தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்

| | | |
|---|---|---|
| சுயேச்சைக்குழு - 2 |  | X |



# சுயேச்சைக்குழு - 2 | X



த.சுபத்திரன் (றொபேட்)

அ. வரதராஜப்பெருமாள்

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
(ஈ. பி. ஆர். எல். எவ்)

(இ/1805)



**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை**
**ஆதரித்துவாக்களிக்குமாறு வேண்டுகின்றேன்**

வேட்பாளர் பன்னிருவரில் ஒருவனாகிய

## இராமசுவாமி உருத்திரா B.Sc. (LOnd)

சட்டத்தரணி (Advocate)
முன்னாள் ஆசிரியர் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி, கரவெட்டி
புனித இருதயக் கல்லூரி, அநுராதபுர புனித யோசப்பர் கல்லூரி
யாழ்.பல்கலைக் கழக பேரவை உறுப்பினர்

# அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ் | X | 10 | X

(இ/860)

## இன்று ஒரு தகவல்

# நாம் வேண்டும் இறையருளே நன்மையான வாழ்விற்கு வழிவகுக்கும்

பாரதப் போர் நடைபெறுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. அது தர்மத்திற்கும் அநீதிக்கும் எதிரான போர் கிருஷ்ணனின் தூது தோல்வியிலேயே முடிவடைந்து விட்டது.

போர் நிச்சயமாகி விட்ட பின் துரியோதனன் முதலியவர்களும் அர்ச்சுனன் முதலியவர்களும் படைக்கு அணி திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடத் துவங்கி விட்டனர். இந் நிலையில் கிருஷ்ணனின் உதவியை நாடுவது என இரு தரப்பினரும் தீர்மானித்தனர்.

அருச்சுனனும் துரியோதனனும் கிருஷ்ணனை நாடி வந்த போது அவர் கண் வளர்ந்திருந்தார். அர்ச்சுனன் கிருஷ்ணனின் திருவடிக்கு அண்மையில் நின்று கொண்டிருந்தான். துரியோதனன் தலைமாட்டில் வந்து நின்றான். கண்ணன் துயில் கொள்வதாக பாவனை செய்து கொண்டிருந்தார்.

கண்ணன் துயில் கொண்டான் அகிலமே அழிந்துவிடும் இயக்கமற்றுப் போகும். இந்த விடயங்கள் எல்லாம் அர்ச்சுனன் நன்கு அறிவான் - எனவே கிருஷ்ணனை பார்த்து 'கண்ணா நீ துயில் கொண்டால் வையம் முழுவதும் தூங்கி விடும். கண்ணா உனது பாவனை போதும் எழுந்திரு'' என்று அர்ச்சுனன் கண்ணனை வேண்டிக் கொண்டான்.

போரின் சூத்திரதாரியான கண்ணன் கண்ணைத் திறந்து பார்த்தான். தலைமாட்டில் துரியோதனன் ஆவலுடன் கிருஷ்ணனை நோக்கிக் கொண்டிருந்தான். ஆனால் கண்ணனோ திருவடிகளில் நின்ற அர்ச்சுனனை ஏறிட்டு நோக்கினான்.

''அர்ச்சுனா எதற்காக வந்தாய்? வேண்டியது என்ன என்று கூறு'' என்று கண்ணன் அர்ச்சுனனை வினவினான் துரியோதனன் சினத்துடன் ''கிருஷ்ணா'' என்றான் அப்போது தான் துரியோதனனை காண்பது போல் பாவனை செய்த கண்ணன் ''துரியோதனா உனக்கு வேண்டியது எது என்று கேள்'' என்றான்.

துரியோதனன் கிருஷ்ணனின் சேவைகளையும் அர்ச்சுனன் தனது பக்கம் கிருஷ்ணன் நிற்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் கிருஷ்ணனிடம் வேண்டினர். அதன்படியே கண்ணனும் செய்வதாக வாக்களித்தான் அப்படியே தான் மகாபாரத போர்க்களமும் நடந்தேறியது.

இறைவனின் அருளை நாடிய அர்ச்சுனன் இறுதியில் வெற்றி பெற்றான் படைப் பலத்தையும் ஆள் பலத்தையுமே பெரிதாக எண்ணிய துரியோதனன் இறுதியில் நிலைகுலைந்து போர்க்களத்தில் அழிந்தே போனான்.

இவ்வுலகத்தில் நாம் வேண்டுவது இறையருளே தவிர. புறச் சடங்குகளால் வாழ்வை சூழ்ந்துள்ள நிலையற்ற தன்மைகளையல்ல.

மகாபாரதம்

# சந்தேக நபர்கள் ரிமாண்டில்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கரந்தன் பகுதியில் மூதாட்டி மீது பாலியல் வல்லுறவு கொண்டார்கள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவச்சிப்பாய்களான அபயசிங்க உதயன் களாகேஅனில்காமினி, களு பண்டாகே சுகந்தகுமாரகேரத் ஆகியோரை தொடர்ந்தும் விளக்கமறியலில் இம்மாதம் 18 ஆம் திகதி வரை வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(க-12)

# தரம் 5 புலமை பரிசில் பரீட்சை மேலும் சில பாடசாலை முடிவுகள்

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மேலும் சிலரின் முடிவுகள் பாடசாலை ரீதியாக தரப்படுகிறது;

நீர்வேலி சீ. சீ. த. க. பாடசாலை

கணேசராசா கபிலன்- 147 புள்ளிகள்

கனகரத்தினம்கிலேந்தி-138

ஜெ. அருஜீனன்-164

க. பத்மஜா-156

உ. பவுஜிஜா-155

வி. நிவேதா-152

இ. ஜெகீசன்-150

செ. சஜிக்கா-144

சி. மாதங்கி-144

சு. சஜரதன்-142

ஜெ. ஜெனிவி-141

ப. இருவாரங்கன்-140

# சண்டிலிப்பாயில் வாணிவிழா

(மானிப்பாய்)

வலிதென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் வாணிவிழா இன்று 6ந் திகதி வெள்ளி காலை 9மணி முதல் உதவித் திட்டமிடல் பணிப்பாளரும் நலன்புரிச் சங்கத் தலைவருமாகிய மு. பாலசிங்கம் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதேச செயலர் நா. வேதநாயகனின் சிறப்புச் சொற்பொழிவும் அதனைத் தொடர்ந்து மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலய மாணவி தெ. பவாதுஜாவின் செல்வக்குழந்தை'' இசை விருந்தும், பட்டி மன்றமும் இடம் பெறும்.

(க-120)

# இன்று

தொல்புரம் பத்தானைம்பதி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவ சுவாமி திருக்கோயிலில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ''கலைமகள் விழா'' டாக்டர் க. லோகேஸ்ரன் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் மேற்கு பிரதேச சபையின் தலைவர் என். திரிலோகநாதனும், சிறப்பு விருந்தினராக கிராம உத்தியோகத்தர்கள் சோ. சுந்தரலிங்கம், ம. சிறிமுருகவேளும், கௌரவ விருந்தினராக அதிபர் திருமதி சோதிலிங்கமும், வரவேற்புரையை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் ''சமூக மணி'' சி. சி. வரதராசாவும், ஆசியுரையை யாழ். பல்கலைக்கழகம் பிரம்மஸ்ரீ இ. உமாசுதசர்மா ஆகியோர்களும் பங்கு பற்றிச் சிறப்பிக்கவுள்ளனர். கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

(க)

# பிரசாரம் நாளையுடன் நிறுத்தம்

(கொழும்பு)

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள 11 வது நாடாளுமன்றத் தேர்தலையொட்டி இடம் பெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்கான காலப்பகுதி நாளை நள்ளிரவுடன் முடிவுறுகிறது.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் அதிக விருப்பு வாக்குகளைப் பெறும் வகையில் பலத்த போட்டி போட்டு தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

(உ)

# வருடாந்த பொதுக்கூட்டம்

## நவராத்திரி நாயகியை வலம்புரியில் வழிபடுவோம்



### சரண்புகுவோம்...!

கல்வியில் நாம் சிறக்க கலை
வாணிக்கு விழா எடுப்போம்
பள்ளிக்கூட மெங்கும் அலங்கரிப்போம்
பற்பல கலைகளை நாம் படிப்போம்
அம்மையும் அப்பனும்- ஆரணியே அவள்
பாதக் கமலம் சரண் புகுவோம்

கு. யோகானந்தி தரம் 5
யா/ ஆனைப்பந்தி மெ. மி. வி.

### கல்வித் தாயைப்பணிந்து

கலைமகளாய் கலைக்கு அதிபதியாய்
கலைமிளிரக் கையில் வீணையுடன் - நலம்
திகழ் ஏட்டுடன் அட்சமாலையும்
புகழ் கல்வித்தாயைப் பணிந்து

ஜெ. ஜெயகௌரி
க. பொ. த 2000
சண்டிலிப்பாய்
இந்துக் கல்லூரி

★ ★ ★

### நவராத்திரிக் கவிதை மாலை

உற்ற நவ தினங்கள் உள்ளம் உருகி
மற்றன்றி உம்மை நினைந்து - கற்றலுடன்
செல்வம், செறிவீரம் தாவென்றிறைஞ்சுகிறேன்
நல்குவீர் வரத்தினை நயந்து

ஜெ. பிரேம்குமார்
தரம் - 10
யாழ்/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

★ ★ ★

### நாமகள் சமர்ப்பணம்

தூவி மலர் சந்தனம் இட்டு துதித்து விட்டால்
நாவில் கல்வி வந்துவிடுமா நாளும் பொழுதும்
தூசு தட்டி ஏடுகளைப் படிக்காவிடில் அதுவா
பூசி நாமகளுக்கு படைக்கும் படையல்

ச. பிருந்தாஜெனி
2000 உயர்தரம்
யா/ யூனியன் கல்லூரி தெல்லிப்பளை

★ ★ ★

### அருள் தா

பெற்றோர் உயிர் தந்தனர்
கற்றோர் கல்வி தந்தனர்
உற்றவள் நீ அருள் தா
கற்ற கல்வி ஞானம்
மற்று பெற்று வாழ!

சாலை
கணேசராசா கபிலன்- 147
புள்ளிகள்
கனகரத்தினம்கிஷேந்தி-138
புள்ளிகள்
கரந்தன் இ ர ா மு ப் பிள்ளை வித்தியாலயம் நீர்வேலி;
கே. வசந்த் -134
என். கௌசலை-140
சி. ஐஸ்வர்யா- 162
வி. சாமினி-134
எம். சிவாஞ்சலி-153
எஸ். சேரன்- 166
கே: சஜனி -147
யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
க: மேகலன்-176
சி. கௌதமன் -170
பா: துவாரகி-167
சி. மாதங்கி-144
சு. சஜரதன்-142
ஜெ. ஜெனிவி-141
ப. திருவரங்கன்-140
கோ. பொதிகைச்செல்வன்-138
ச. சசிரேகா-161
த. ஜெசிக்காபிரசாந்தி-137 (வடகிகு-கிழக்கு மா கா ண சபை நட ா த் திய ஆங்கில தினப்போட்டியில் ஆங்கில எழுத்துப் பரீட்சையில் முதலிடம் பெற்றார்)
ஞா: கோபிகா-137
ச. யோகாம்பிகை-137
ச. கௌசிகன்-136
உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை:.
பா: கபில்ரன்காஞ்சனா-152

## வருடாந்த பொதுக்கூட்டம்

(புலோலி)

கிளிநொச்சி மாவட்ட சாரணர்கிளைச் சங்கவருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் சாவகச்சேரி பிரதேச செயலர் பூ. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

வருடாந்த சங்க உத்தியோகத்தர்கள் தெரிவுடன் புதிய மாவட்ட ஆணையர் தெரிவிலி இடம்பெறவுள்ளது.

(க-52)

கற்றோர் கல்வி தந்தனர்
உற்றவன் நீ அருள்தா
கற்ற கல்வி ஞானம்
முற்று பெற்று வாழ!

கே. துஷ்யந்தன்
தரம் - 10
யாழ். பரியோவான்கல்லூரி,

★ ★ ★


## புவனம் தனைக் காப்பாய்

நவராத்திரியில் உனை நாம் தொழ
புவனம் தனைக் காப்பாய் கலைவாணியே
முப்பெரும் தேவிகளாய் காட்சி தந்து
இப்புவனம் ஒளிர அருள்வாய் கலைவாணியே!

தர்மராஜா அஜந்தகுமார்
தரம் - 11
யாழ்: நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்;


# சுயேச்சை குழு இல-3 (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி)

☏ நாடும் ஏடும் வீடும் சொல்லும் வெற்றி நமதே!
☏ தாய்மார்கள் எம் பக்கம்!
இளைஞர்கள் எம் பக்கம்!
யுவதிகள் எம் பக்கம்!
மக்கள் எம் பக்கம்!



முதன்மை வேட்பாளர்
## வேல்முருகு தங்கராசா

உங்கள் வாக்கைத் தொலைபேசிக்கே தந்திடுங்கள்

# பொதுஅறிவுவினாக்கள்

## இல. 25 தொகுப்பு: யூட்

பின்வரும் நாடுகளின் தலைநகரங்கள் எவை?

01) அங்கோலா—
02) உக்ரைன்—
03) உஸ்பெகிஸ்தான்—
04) எரித்திரியா—
05) கானா

பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் எவை?

06) கியூபா—
07) குரோஷியா—
08) சிம்பாப்வே—
09) சிலி—
10) நோர்வே—

பின்வரும் நாட்களிற்கான சர்வதேச தினங்கள் எவை?

11) ஏப்ரல் 12—
12) செப்ரெம்பர் 27—
13) செப்ரெம்பர் 8—
14) ஜூலை11—
15) மார்ச் 11—
16) ஹங்கேரி நாட்டு பாராளுமன்றம் எவ்வாறு அழைக்கப்படும்?
17) ஹாட்ரியன்ஸ் சுவர் எங்குள்ளது?
18) ஈரான் நாட்டின் தேசிய சின்னம் எது?
19) ஐரோப்பாவின் போர்க்களம் என்று அழைக்கப்படும் நாடு எது?
20) கலிலியோ மீற்றரை கண்டு பிடித்தவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
21) சர்வதேச தொழிலாளர் நிறுவனம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
22) ITU என்னும் சர்வதேச நிறுவனத்தின் விரிவாக்கம் யாது?
23) இந்திரா காந்தி எத்தனையாம் ஆண்டு கொலை செய்யப்பட்டார்?
24) இலங்கையில் தொலைக்காட்சி சேவை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
25) மயக்க மருந்து சிகிச்சையில் குளோரோபோமை அறிமுகப்படுத்தியவர் யார்?
26) இலங்கையில் முதலில் தமிழ் மொழியில் வெளியான நாளிதழ் எது?
27) சர்வதேச தபால் கழகம் எத்தனையாம் ஆண்டு உருவாக்கப்பட்டது?
28) இலங்கை ஐ: நா சபையில் எத்தனையாம் ஆண்டு இணைந்து கொண்டது?
29) சீனாவில் பேசப்படும் மொழி எது?
30) HK எந்த நாட்டின் விமான சேவை பதிவு குறியீடு ஆகும்?
31) ஐக்கிய அமெரிக்கா எத்தனை மாகாணங்களைக் கொண்டது?
32) விமானத்தில் வேகத்தை அளக்கும் கருவி எவ்வாறு அழைக்கப்படும்?
33) இலங்கையில் இலவச பாடத்திட்ட விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது எந்த ஆண்டில்?
34) ''கிராண்ட் மாஸ்டர்'' என்ற பட்டத்தை வென்ற முதல் சதுரங்க இந்திய வீரர் யார்?
35) எப்போது உலக பூப்பந்தாட்டப் போட்டிக்கான தாமஸ் கோப்பை ஏற்படுத்தப்பட்டது?
36) முதல் உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி எத்தனையாம் ஆண்டு இடம் பெற்றது? எங்கு

## பொது அறிவு வினா இல. 24 இற்கான விடைகள்

1) கொட்டபக்சி - தென் அமெரிக்கா
2) பிரசல்ஸ்
3) அயர்லாந்து
4) சவாலோ பறவை
5) சர்வதேச போதைப் பொருள் தடுப்பு தினம்
6) அமெரிக்கா
7) கனடாவில் 1930
8) மேற்கிந்திய தீவுகள்
9) உருகுவேயில்
10) சர்வதேச ஒலிம்பிக் சம் மேளனம் (100)
11) அவுஸ்திரேலியமெல் பேர்ன் நகரில் 1956-ல்
12) சுவான் லீக்பாய்
13) 1980-ல்
14) அம்பேவல
15) 1895
16) 11 நாடுகள்
17) போர்ட் மோர்ஸ்பி
18) சைப்ரஸ் பவுண்
19) தென் அமெரிக்கா
20) பிலிப்பைன்ஸ்
21) அமெரிக்கா
22) கிராண்ட் நசனல்
23) தங்கக் கோல்
24) மைக்கல் பரடே
25) நியூயோர்க்
26) சுவிட்சர்லாந்து
27) International Fund for Agricultural Development
28) Cable News Network
29) பிரான்ஸ்
30) ஆபிரிக்கா
31) ஸ்டைராக்ஸ் பென் சாயின் மரத்தின் பிசின்
32) சுவிற்சர்லாந்து
33) இத்தாலியின் பைசா நகரில்
34) புலிக்ஸர் விருது
35) சர்வதேச சேமிப்பு தினம்
36) 1960
37) 1978
38) வில்லியம் கோபல்லாவ
39) 1907
40) வானம்பாடி

## பணி சிறக்க வாழ்வீர்!

ஏணி ளானீர் நீயிர் என்றும்
இலக்குகள் வெற்றியென்றே
ஆணித்தரமாய் நின்று தினம்
அலுக்காமல் கல்வியூட்டி

பேணிய மாணாக்கரில் உள்ள
பெருந்திறன் வெளிக்கொணர்ந்து
காணுவீர் மனத்திருப்தி நல்ல
கற்பித்தல் தொழிலில் உள்ளீர்!

இடர்களோ பலவடிவம் இடையில்
இறுக்கிடும் கணிப்பீடுகள்!
சறுக்கிடவில்லை நீங்கள் கொஞ்சம்
சளைக்கவுமில்லை வந்து

குறுக்கிடும் தடைகளூடே பிஞ்சுக்
குழந்தைகள் தனையணைத்து
கிறுக்குகள் அடக்கிக் கல்விக்
கிளைகள்ாய்ப் பரந்து நின்றீர்!

சத்துள்ள உணவிருந்தும் இருந்து
சாப்பிட நேரமில்லை நின்று
கத்தியே தொண்டை நெஞ்சுதினம்
காய்ந்திடும் வேலை கண்டு

'வாத்திக்கு என்ன நல்ல
வகையான சம்பளந்தான்
வருடத்தில் நல்ல லீவும் வந்து
வாய்த்ததே வசதி'யென்பார்!
எடுத்ததோ ரலனை நன்றாய்
எப்படி விளக்கிடலாம்...?
படுத்திடும் போதும் அந்த
நினைப்புடன் துயிலெழுந்து

பம்பரமாகச் சுற்றி நாளும்
பாங்குடன் செயல்படுவீர்
பாரிலே பணி சிறக்க
பல்புகழ் ஓங்க வாழ்வீர்!

செ. பவானி

(இன்று ஆசிரியர் தினத்தை ஒட்டி இக்கவிதை பிரசுரமாகிறது)

## பொது அறிவு வினா இல. 24

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

பெயர் விபரம்

1) இ. சயந்தன், வட்டுக்கோட்டை
2) ந. கோசலா, ஓட்டுமடம்
3) சி. திவாகரன், மட்டுவில்
4) செ. ஜெரோம்நிரோஷன், வட்டுக்கோட்டை
5) ச. சுஜன், நல்லூர்
6) ச. ஹபிலன், வட்டுக்கோட்டை
7) சி. காயத்திரி, நல்லூர்
8) உ. அனித்தா, உரும்பிராய்
9) சி. தாட்சாயினி, நல்லூர்
10) ஜெ. சங்கீதா, கோண்டாவில்
11) இ. றஜிதா, கொக்குவில்
12) வே. செந்தூரன், மானிப்பாய்
13) கே. பிரியவதனா, நெல்லியடி
14) பொ. பிரணவன், ஊர்காவற்றுறை
15) வே. அன்ரன் றெஜினோல்ட், ஆனைக்கோட்டை
16) து. உமா, சண்டிலிப்பாய்,


வலி. கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

கேள்வி அறிவித்தல் - 2000

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச இணைத்தவர்

35) எப்போது உலக பூப்பந்தாட்டப் போட்டிக்கான தாமஸ் கோப்பை ஏற்படுத்தப்பட்டது?

36) முதல் உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி எத்தனையாம் ஆண்டு இடம் பெற்றது? எங்கு இடம் பெற்றது?

37) உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் பிரேசில் எத்தனை தடவை வெற்றி பெற்றது?

38) 13 வது ஏசியன் விளையாட்டு போட்டிகள் எங்கு இடம் பெற்றது?

39) நியூகினியா தீவு எங்கு உள்ளது?

40) வெள்ளி ஒரு முறை சூரியனை சுற்றி வர எத்தனை நாட்கள் எடுக்கும்?

குறிப்பு:-

இதற்கான விடைகளை 12 . 10. 2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்

---

## அறிவியல் பகுதி வினா இல. 25

"வலம்புரி"
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

மாணவர் முழுப்பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

கற்கும் பாடசாலை: ..............................

மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

---

# கேள்வி அறிவித்தல் 2000

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 20-10-2000ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இக்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினமே பி. ப. 2-00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை "தவிசாளர் வலி-கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 20-10-2000ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|
| புதிய பிரதேச செயலகம், கோப்பாய்க்கு உள்வீதி அமைத்தல் | 1500.00 | 500.00 |

மேற்குறிப்பிட்ட வைப்புப்பணத்தையும், கேள்விப்படிவக்கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 19-10-2000ம் திகதி பி. ப. 12-30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பூ. குணசிங்கம் ஜே. பி. யு. எம்
தவிசாளர்,
வலி. கிழக்கு பிரதேச சபை
நீர்வேலி.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம் நீர்வேலி.
03-10-2000

(இ - 855)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்



# சொந்தமண்ணைவிட்டேகும் தென்மராட்சியினர்

# சோபையிழந்த நிலையில் சாவகச்சேரி நகர்

## நிம்மதியானவாழ்விற்கு ஏங்கும்மக்கள்

தென்மராட்சி மக்கள் இற்றைக்கு நான்கு மாதங்களுக்கு மேலாக நிலவும் சமகாலப் போர்ச் சூழ் நிலையினால் தமதுசொந்த வதிவிடம்விட்டு காணி பூமி, விளை நிலங்கள், உடைமைகள், கால்நடைகள், வீட்டுப்பிராணிகள் என எல்லாவற்றையுமே இழந்த நிலையில் இன்று வடமராட்சிப் பகுதிகளிலிருந்து அவதியுறுகின்றனர்.

சொந்த மண்ணை விட்டு பிரியும் அவர்களின் ஏக்கம் நிச்சயம் கண்ணில் நீர் மல்கச் செய்யும் சோக நிகழ்வே.

1995 இடம்பெயர்வின் போது வலிகாமம் மக்களிற்கு ஆதரவுக் கரம் நீட்டிய அம்மக்கள் இன்று கண்ணீருடன் இருப்பிடம் தேடி அலைகின்றனர்.

### பொது இடங்கள்

இந் நிலையில் தென்மராட்சியின் போர்ச் சூழ் நிலையினால் வீடுகள் மற்றும் பொது இடங்களான பாடசாலை, சந்தை கிராம, நகர சபைகள் பொது அமைப்புக்கள் எல்லாமே இன்று வடமராட்சிக்கு நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவை அமைந்திருந்த கட்டடங்கள் எறிகணைகளாலும் விமானக் குண்டு வீச்சுகளாலும் மண்ணுடன் சங்கமித்து வருகின்றன.

எத்தனை பாடசாலைக் கட்டடம் சந்தைக் கட்டடங்கள், வீதிகள், கோயில்கள் ஏற்கனவே புனரமைக்கப்பட்டு இருந்தமை முன்பு அறிந்ததே.

### விளை நிலங்கள்

தென்மராட்சி மக்களின் பொருளாதாரம் விவசாயமாகும். தென்மராட்சியின் வட போர்முனை யுத்தத்தில் தனங்கிளப்பு அறுகுவெளி போன்ற இடங்களில் இருந்து மக்கள் விதைத்த வயல் புலங்களை விட்டும் உடைமைகளை விட்டும் உயிர்ப் பிச்சை கேட்டு தென்மராட்சிக்கு வந்தனர்.

இன்று தென்மராட்சி மக்களும் தமது விளை நிலங்களை விட்டு தோட்ட நிலங்களை விட்டு தளம்பிக்கொண்டிருக்கின்றனர். இப்பொழுது சுமுகமான நெல் விதைப்புக் காலம் அதே போல் மாரிப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் தென்மராட்சியில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் குறிப்பாக எழுதுமட்டுவாள், விடத்தற்பளை மீசாலை, வரணி, குடமியன், மந்துவில் போன்ற பகுதிகளை எடுத்துக் கொண்டால் மரவள்ளிக் கிழங்கு, கத்தரிக்காய், மிளகாய், வெண்காயம், புகையிலை, வாழை மற்றும் சிறு தானியச் செய்கையை மேற் கொள்ளுமிடங்கள்.

இவைகள் இன்று எறிகணைகளாலும் விமானக் குண்டுகளாலும் புல்டோசராலும் நாசப்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்னும் வான் பயிர்களான தென்னை, மா, பலா, தோடை, எலுமிச்சை, கமுகு கரும் பென கற்பகதரு வெனும் பனை இவற்றிலிருந்து தென்மராட்சி மக்கள் பெறும் வருவாய்கள், ஜீவனோபாயத்துக்கு பயன் தரும் இவைகள் இன்று அடியோடு சாய்க்கப்பட்டும், கிளைகள் சிதறப் பட்டும், பனை, தென்னை போன்றன காவலர்களிலும் முன்தடை முகாம்களிலும் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருக்கிறது.

### பாடசாலைகள் கோவில்கள்

தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பாடசாலைகள் இன்று தரை மட்டமாக்கப்பட்டதோடு. சீர்குலைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தேசிய பாடசாலையான சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி பெண்கள் பாடசாலை இவை போன்று பல பாடசாலைகள் சிதைக்கப்பட்டுள்ளன. தளபாடங்கள் களவாடப்பட்டும் மூன்னரங்கங்களில் இருக்கைகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

பாடசாலை உபகரணங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. இது போன்று இங்குள்ள பல்வேறு வழிபடு தலங்கள் பூசைகள், விழாக்கள், மஹோற்சவங்கள் வழிபாடுகள் இன்றி காணப்படுகின்றன.

தென்மராட்சியின் பல்வேறு இடங்களிலும் புனரமைப்பு செய்து ஆலயங்களை அமைத்தும்விஸ்தீரணம் செய்தும் விட்டது. இன்று கதவுகள் அடைக்கப்பட்டு பின் கள்வராால் உடைக்கப்பட்டும் தளபாடங்கள் அபகரிக்கப்பட்ட நிலையிலும் தென்மராட்சியின் பல இடங்களில் தலங்களின் நிலபரம் உள்ளது.

மேலும் தென்மராட்சியின் பிரதான பிரதேசமாக விளங்கும் சாவகச்சேரி இன்று சோகத்தோடும், துயரத்தோடும் தன்னியல்பு மாறிக் காட்சியளிக்கின்றன. சுடுகாட்டுக்கு நிகராக இன்று சாவகச்சேரியின் நிலை இங்கு அமைந்துள்ள பிரதேச செயலர் அலுவலகமும், அரசினர் வைத்திய சாலையும் தென்மராட்சியின் கேந்திர நிலையங்கள் இவை இன்று சிதைந்த நிலையிலும், சின்னாபின்னமாயும் அரைகுறைக் கட்டடங்களாகவும் அமைதியாக கிடக்கின்றன. இக்கட்டடங்கள் ஏற்கனவே புனரமைக்கப்பட்டதும், புதிதாக கட்டப்பட்டுக் கொண்டிருந்தவையுமாகும்.

இவ்வாறே சாவகச்சேரி புதிய சந்தைக் கட்டடம் இதனோடு அமைந்த வங்கிக் கிளைகள் பொதுச் சந்தைக் கட்டடங்கள் நிலத்திலே மண்டியிடுகின்றன. காடுகளும். சோலைகளும், கற்பக தருக்களாலும், வயல் நிலங்கள் தாமரை வாவிகள். சீரான வீதிகள், சிறப்புமிகு தலங்கள் பொது அமைப்புகளுடன் காட்சிதந்த தென்மராட்சி இன்று சுடலை வனமாகக் காட்சி தருவது வேதனையான நிகழ்வே. (க-28)

## ஆசிரியர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். சன்மார்க்க மகா வித்தியாலய ஆசிரியர் தின விழா நிகழ்வுகள் இன்று காலை 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு மாணவர் மன்றத்தலைவி கு.தஸ்யந்தி தலைமையில் நடைபெறும்.

## பாராட்டு

யாழ். பல்கலைக்கழக 19 வது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளும் அனைத்துப் பீட பட்டதாரிகளையும் பல்லாண்டு காலம் சிறப்புற வாழ புறநிலைப் படிப்புகள் அலகினர் வாழ்த்துகின்றனர். (க)

## தையல் பயிற்சி வழங்கல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற தையல் பயிற்சியில் பங்குபற்றிய பெண்களுக்கு சுயதொழில்வாய்ப்புக் கடனுதவி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படிகடனுதவித்திட்டம் புளியங்கூடல் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் வழங்கப்படுகிறது. (த-76)

## இந்து மதம் கூறும் விழாக்களை, உரிய விதத்தில் அனுட்டித்தால் உயரிய வாழ்வு பெறமுடியும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமயம் மனிதன் மனிதனாக, புனிதனாக, மாண்புள்ளவனாக வாழ்வதற்கு ஏற்ற வழி காட்டுகிறது.

இந்த வகையில் இந்துமதம் கூறும் விழாக்களை, உரிய வகையில் அனுட்டித்து உயரிய வாழ்வு பெற முடியும்:

இவ்வாறு, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி யாழ். மேற்தரக்கிளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாணி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், அதன் பிரதான முகாமையாளர் ஏ. அருமைநாயகம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நவராத்திரி விழாவில்கூட்டு வழிபாடு முக்கிய இடம்பெறுகிறது. இந்த கூட்டிணைவு தொழிலகங்களில். ஆலயங்களில் மட்டுமன்றி வீட்டிலும் நாட்டிலும் கைக்கொள்ளப் படுமானால் இன்றைய துன்பங்களுக்கெல்லாம் முடிவு கட்ட முடியும் என்றார். (உ

## தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் மோசடி செய்த அதிபர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகள் அதிபர்கள் மீது கடும் ஒழுக்...

தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகள் மற்றும் அதிபர்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு மகாணகல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ் ஆசிரியர்நியமனமோசடியில் ஈடுபட்டு குற்றவாளிகளாக காணப்படுபவர்களின் சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வுகளை நிறுத்தி வைப்பதற்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமையும் இங்கு குறிப்பி...

## வாழைச்சேனையில் துப்பாக்கி பிரயோகம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பலி

(கொழும்பு)

கல்மடுவில் உள்ள வாழைச்சேனைக்கு அருகே, திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

...தில் கலந்துவிட்டு மூன்று சகோதரர்களும் வீதி வழியாக வீடு திரும்பிக்கொண்டிருக்கையில், படையினர் துப்பாக்கியால் சுட்டதாகவும்.

இவர்களில் ஒருவர்துப்பாக்...

ணம் வழங்க நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகள் அதிபர்கள் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு மகாணகல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வுகளை நிறுத்தி வைப்பதற்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ந-2)

# தரம் 5 புலமைப் பரிசில், பரீட்சையில் தோற்றிய மாணவரில் 10 வீதமானோரே சித்தியெய்தினர்

## பரீட்சைத்திணைக்களம் தகவல்

இவ்வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 10 வீதமானவர்களே சித்தியடைந்திருப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சிங்கள மொழிமூலம் இப் பரீட்சைக்குத் தோற்றிய 2 இலட்சத்து 803 மாணவர்களில், 20 ஆயிரத்து 428 பேர் சித்தியடைந்துள்ளனர்.

தமிழ் மொழி மூலம்தோற்றிய 47 ஆயிரத்து 510மாணவர்களில் 4 ஆயிரத்து 808 பேர் சித்தியடைந்துள்ளனர் எனவும் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. (உ)

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

அதே குடும்பத்தைச்சேர்ந்த இன்னொருவர் படுகாயமடைந்துள்ளார்.

திங்கள் இரவு 9.45 மணியளவில் அயலில் உள்ள உறவினர் வீட்டு விசேடம் ஒன் துப்பாக்கியால் சுட்டதாகவும்.

இவர்களில் ஒருவர்துப்பாக்கிக் காயங்களுடன் வீடு சென்று, மறு நாட் காலை வந்து பார்த்தபோது ஏனைய இருவரும் சடலமாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தேர்தல் கட்அவுட்

(அரியாலை)

திருநெல்வேலிசந்தியிலிருந்து பரமேஸ்வராச் சந்திவரையும் நல்லூர் சந்தசுவாமி கோவில் சூழலிலும் அரசியல்கட்சி ஒன்றின் தேர்தல் பிரச்சார கட்அவுட்டுகள்பல வர்ணங்களில் மின்சாரத் தூண்களில் கட்டப்பட்டுள்ளன. (த-106)

# ஒலி பெருக்கியில் தேர்தல் பிரசாரம் நோயாளர் பெருஞ் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ், போதனா வைத்தியசாலை சுற்றுப் புறங்களில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுகின்ற கட்சியினர் ஒலி பெருக்கிகளைப் பாவிப்பதனால் நோயாளர் பெருஞ் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

அத்துடன் ஏனைய வாகன சாரதிகளும் வைத்தியசாலைக்கு அண்மையில் ஒலி எழுப்புவதை தவிர்க்க வேண்டும் என யாழ். போதனா வைத்தியசாலையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (செ-12)




சுரேஸ் பிரேமசந்திரன்

தமிழ் மக்களை வதைக்கும்
யுத்தத்தையும்அவசரகாலச் சட்டத்தையும் இல்லாதொழிக்க
தோடம்பழச் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

சுயேச்சைக் குழு-1 X



தர்மராஜா வில்சன்

இல. 7

(சி-827) ஈ. பி ஆர். எல். எவ். சுரேஷ் தலைமை

# 450 கிராம் பாணின் விலை 10ரூபா

## யாழ். நு. பா. சங்கம் கடும் எதிர்ப்பு

### ஒருதலைப்பட்ச முடிவாம்

(யாழ்ப்பாணம்)

450 கிராம்பாணிற்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக ஏப்பிரல் மாதம் யாழ். கச்சேரியில் ஓர் உரையாடல் நடைபெற்றது. இதில் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க பிரதிநிதிகள், கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பாண் தயாரிப்பதற்கு தேவையான பொருட்களின் விலைகள் கவனிக்கப்பட்டு, தயாரிப்பாளர்களது உற்பத்தி செலவு கணிக்கப்பட்டது. இதுவரை காலமும் 350 கிராம் பாண் 8.50 சதத்திற்கு விற்கப்பட்டது. இந்நிறைகூட சரியானதாக இருந்ததில்லை. அப்போது 1 கிலோ மாவின் விலை 17.85 சதமாகும். தற்போது 1கிலோ மாவின் விலை 14.85 சதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

முதலாவது உரையாடலின் போது - விலை நிர்ணயம் செய்வதில் சரியான தகவல்கள் பெறப்பட வேண்டிய நிலையில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு இரண்டாவது முறை யாழ் - மேலதிக அரச அதிபர் தலைமையில் இவ்விலை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்திலும் உற்பத்திச் செலவு விபரங்கள் கணிக்கப்பட்டு 450 கிராம்பாணிற்கான விலையை யாழ். பேக்கரி உரிமையாளர் சங்கம் ரூபா 10.50 ஆகவும் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் 9.00ரூபாவாகவும் தெரிவித்த நிலையில் யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் உற்பத்தி செலவு போன்றவற்றை சரியான கணிப்பீடு செய்து, உற்பத்தியாளர்கட்கு நஷ்டம் ஏற்படாதவாறு 450 கிராம் பாணின் உச்ச விலை 8.75 சதமாக இருக்க வேண்டும் என்றும் யாழ். மாவட்டத்தில் நிலவும் அசாதாரண நிலை காரணமாக 450 கிராம் பாணின் உச்ச விலை 9.00 ரூபாவாக இருக்கலாம், எனவும் கூறியது.

இதனை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் ஏற்றுக்கொள்ளமுடியாது. எனகூறியதையிட்டு யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்க பிரதிநிதிகளாக சென்ற தலைவரும், செயலாளரும் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்

போதும் அதனை காதில் போட்டுக் கொள்ளவில்லை. 1 கிலோ மா 14.85 சதமாக குறைக்கப்பட்டதன் பின்னரும் பாணின் விலை இவ்வாறு நிர்ணயிக்கப்படுவது, அநீதியான நடவடிக்கையின் செயற்பாடோ, மேலும் 3 வது கூட்டத்தில் யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்திற்கு அழைப்பு விடுக்காமலேயே, 450 கிராம் பாணின் விலை பத்து ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டது.

இன்று இடம்பெயர்ந்து அல்லலுறும மக்களுக்கு உடனே நுகரக்கூடிய உணவு பாண் ஆகும். ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடின்றி, சகலருக்கும் இலகுவாகப் பெறக்கூடிய உணவுப்பண்டம் பாண் ஆகும்.

இதுதவிர குடாநாட்டில்மக்கள் இடம் பெயர்ந்து, உணவை சமைத்து உண்பதற்கு இடமின்றி அலைந்து திரியும் அவல நிலை. அத்துடன் போர் தொடர்ந்துநடைபெற்றுக் கொண்டு இருக்கும் நிலையில்-பாணின் விலை பத்து ரூபாவாக நிர்ணயம் செய்திருப்பது, லாப நோக்கத்தை அடிப்படையாக கொண்டதே. கொழும்பில் 450 கிராம் பாணின் விலை ரூபா 8.50சதமாக இருக்கும் போது. அதே விலையில் மாவினைப் பெறும் யாழ். குடாநாட்டு பாண் உற்பத்தியாளர்களுக்கு, எவ்வதத்தில் செலவுகள் அதிகரிக்கமுடியும். ஏனைய பொருட்களான மாஜரின், உப்பு, சீனி போன்ற பொருட்கள் பெருமளவில் தேவைப்படுவதில்லை. பிறகு, அதனைப் பெறுவதிலுள்ள சிரமம் இன்று நாட்டின் பல பகுதிகளிலும் பாண் தயாரிப்பவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினையாகஉள்ளது. குடாநாட்டிற்கு மட்டும இது தனித்த பிரச்சினையானதல்ல.

ஆகவே தேவையற்ற காரணங்களைக் காட்டி 450 கிராம் பாணின் விலை ரூபா 10ற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதையாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் வரவேற்கவில்லை. மக்களே. பாணை பத்து ரூபாவிற்கு வாங்குவதா இல்லையா என்பதைதீர்மானிக்க வேண்டும்.

(க)

# சங்கே முழங்கு

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தை துன்னாலையுடன் இணைப்பது தர்மமா?

வடமராட்சி பிரதேசத்தில் பருத்தித்துறைநகருக்கு 4 கிலோ மீற்றர் தொலைவில் தென்கிழக்குத் திசையில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அமைந்துள்ளது.

இவ் ஆலயம்உள்ளிட்ட பிரிவுவடமராட்சிவடக்குப்பிரதேச செயலகத்தின் கீழ் அமைந்துள்ளது. புலோலி தபால் நிலையத்தின் ஊடாகவே வல்லிபுரத்திற்கான தபால்கள் விநியோகம் செய்யப்படுகின்றது.

ஆனால் அண்மைக்காலமாக இவ் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் துன்னாலை வடக்கில் அமைந்துள்ளதாக உண்மைக்குப் புறம்பாக செய்தி பரப்பப்பட்டு வருகின்றது.

துன்னாலை வடக்கு பிறிதொரு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கரவெட்டி அஞ்சலகக் கட்டுப்பாட்டின் கீழ் அடங்கியுள்ளது. இது மறைக்க முடியாத உண்மை.

இவ்வாறு பாரிய வேறுபாடுகளுக்கு மத்தியில், வல்லிபுரத்தில் அமைந்துள்ள, வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தை பொருத்தமற்ற வகையில் துன்னாலையுடன் இணைத்துக் குறிப்பிடப் படுவதன் நோக்கமென்ன? மர்மமாக இருக்கின்றது.

இப்படியான மாறான செயற்பாட்டால் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தை உருவுடன் நகர்த்தி புவியியல் ரீதியாக துன்னாலையுடன் இணைக்க முயற்சிக்கின்றார்களா? புரியவில்லை.

வல்லிபுர ஆழ்வார் அடியான்

### மாணவர் மத்தியில்

# நற்பழக்கங்கள் மேலோங்க பூசை வழிபாடுகள் வழிசமைக்கும்

### சமூகஜோதி கணேசதாசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர் மத்தியில் பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஏற்படவும் தெய்வ நம்பிக்கை வளரவும், அவர்களின் எதிர்கால வாழ்வு சுபீட்சமடையவும் பூசை வழிபாடுகள் வழிகாட்டுகின்றன.

இந்த வகையில், பாடசாலைகளில் நவராத்திரி பூசை வழிபாடியற்றுவது பொருத்தமான ஓர் நடவடிக்கையாக அமைகிறது.

இவ்வாறு, கடந்த 28 ஆம் திகதி மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற்ற நவராத்திரி பூசை வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சமூகஜோதி கே.

வாகி வருகிறது.

அகிம்சை இம்சையாகி நிற்கிறது. கல்விகாசாகி விட்டது. மாணவர் மத்தியில் தெய்வ நம்பிக்கை குன்றி பண்புக்கும் படிப்புக்கும் இடையே நீண்டதோர் இடைவெளி தோன்றி விட்டது.

இந்த நிலை மாறி, எங்கள் பண்பாடு பழக்க வழக்கங்கள் மீண்டும் நீண்டு நிலைக்க வழிவகை செய்ய வேண்டிய பணி ஆசிரியர் சமூகத்தின் கைகளில் உள்ளது.

பாடசாலைகளில், சமய பாடத்தை பரீட்சையையும் புள்ளிகளையும் அடிப்படையாக கொண்டு கற்பிக்கின்ற முறை மாற வேண்டும்.

வரிடையே சாதிக்க முடியும்? இவ்வாறான விழாக்கள், பூசைகள் மூலமாக இவை சாத்தியமடையும் என்றார்.

(உ)

## லாம்புகள் வழங்கல்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை ஓ.எல். ஆர் முகாமில் தங்கியுள்ள 125 குடும்பங்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்தினால் கடந்த வாரம் அரிக்கன் லாம்புகள் வழங்கப்பட்டது.

இந்த லாம்புகளை யுனிசெப்நிறுவனம்சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் அண்மையில் கையளித்தது குறிப்பிடத்தக்கது.

(த-120)

### தென்மராட்சி மக்கள்

# உடைமைகள் எடுத்துவர படையினர் அனுமதி வழங்கினர்

(வடமராட்சி)

தென்மராட்சியில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக, அங்கிருந்து வடமராட்சி கிழக்குப் பகுதியூடாக வரும் பொதுமக்கள்

எனினும் எந்தவிதமான உதவிகளோ. நிவாரணங்களோ இவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

இதேவேளை, இடம்பெயர்ந்து வடமராட்சி கட

பாதுகாப்புச் சங்க பிரதிநிதி களாக சென்ற தலைவரும், செயலாளரும் கூட்டத்திலி ருந்து வெளிநடப்பு செய் தோம். இதனால் அன்றைய கூட்டத்திலும் பாணின் விலை நிர்ணயம் செய்யப்பட வில்லை. ஆயினும் 450 கிராம் பாணின் விலை பத்து ரூபாவாக இருப்பது பொருத் தமானது என மேலதிக அரச அதிபர் ஆதரித்துப் பேசியது டன், கொழும்பிலும் பத்து ரூபாவிற்கே விற்கப்படுவதாக கூறினார்.

கொழும்பில் பாணின்விலை 8ரூ50 சதம் என நாம் கூறிய

நடைபெற்ற நவராத்திரி பூசை வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற் றுகையில் சமூகஜோதி கே. கணேசதாசன் குறிப்பிட் டார். பாடசாலை இந்துமாணவ மன்றப் பொறுப்பாசிரியை திருமதி.பகீரதி மூர்த்தி தலை மையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

இன்று நமது நாட்டில் சாந் தியில்லை.சமாதானம் இல்லை.அன்பு,பண்பு,அறம் என்றால் என்னவென்று கேட் கும் இழிநிலையொன்று உரு

பாடத்தைப் பாட்டைசையும் புள்ளிகளையும் அடிப்படை யாக கொண்டு கற்பிக்கின்ற முறை மாற வேண்டும்.

மாறாக,மாணவர் உள்ளங் களில் நல்லெண்ணங்களை யும்,நேர்மைத் திறனையும், நற்பண்புகளையும் ஏற்படுத் தும் விதமாக சமய பாடத் தினை புகட்டி,எங்கள் சமயம் மீண்டும் தழைத்தோங்க மாணவருடாக வழிவகை தேடவேண்டியது காலத்தின் கட்டாய தேவை.

போதனைகளைவிட சாத னைகளால் இவற்றை மாண

வடமராட்சியில் நிலவும் அசாதாரண சூழ்நிலை கார ணமாக,அங்கிருந்து வட மராட்சி கிழக்குப் பகுதி யூடாக வரும் பொதுமக்கள் தமது உடைமைகளை எடுத்து வர படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதேவேளை, தென் மராட்சிப்பகுதியில் பாது காப்பு அரணுக்கு வெளியில் வசித்த மக்களில் பலர் தொடர்ந்தும் மேற்படி சோதனைச்சாவடியூடாக வந்தவண்ணமுள்ளனர்.

இவர்களில் ஒரு பகுதியினர் குடத்தனைப் பகுதியில் தஞ் சமடைந்துள்ளனர்.

உதவிகளோ.நிவாரணங் களோ இவர்களுக்கு இது வரை வழங்கப்படவில்லை.

இதேவேளை, இடம் பெயர்ந்து,வடமராட்சி கட் டைவேலி அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை யில் தங்கியுள்ள 43 குடும்பங் களுக்கு கரவெட்டி பிரதேச செயலகம் சமைத்த உணவு வருகிறது.

இவர்களில் 30 குடும்பங்க ளுக்கு,யாழ்.கச்சேரி புனர் வாழ்வு பகுதி தற்காலிக குடிசை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

(உ-43)


விவசாயிகள் ஐக்கியப்பட வேண்டும்


அனைவரும் ஸ்தாபன மயப்படுத்தப்பட வேண்டும்

விளைபொருட்களுக்கு உச்ச விலைகளும்

பரந்தளவிலான சந்தை வாய்ப்புகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

விவசாயிகளின் இவ்வெண்ணங்கள் ஈடேறி, வாழ்க்கைத்தரம் உயர

எம்மை ஆதரித்திடுவீர் !



என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் / ஈரோஸ்)

(1689)

# மூதூரில் வசித்த தமிழரை மீண்டும் திரும்ப அழைப்பு

(கொழும்பு)

பீதி காரணமாக மூதூர் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த தமிழ்க் குடும்பங்களை சொந்த இடங்களுக்குத் திரும்புமாறு முஸ்லிம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்;

கடந்த திங்கட்கிழமை மூதூரில்பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரசாரக கூட்டத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்கு தலையடுத்து அப்பகுதி மக்கள் வேறு இடங்கள் சென்று ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதனையடுத்தே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது;

இதே வேளை, அப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுவதாகவும் கடைகள் பூட்டப்பட்டு நகர் வெறிச்சோடிக்கிடப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

# வடக்கு- கிழக்கில் இரண்டு விமான நிலையங்கள் அமைக்க துரித நடவடிக்கை

## ஐ. தே. க. தலைவர் ரணில் சூளுரை

(கொழும்பு)

வடக்குக்கிழக்கில் இரண்டு விமான நிலையங்கள் அமைக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்;

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமது கட்சி வெற்றி பெற்று ஆட்சிபீடம் ஏறும் பட்சத்தில் மேற்படி உறுதிப்பாடு சாத்தியமாகும் எனத் தெரிவித்த ரணில்,இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இலங்கையை மாற்றுவதற்கு தான் திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தெற்கின் தேர்தல்பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்;

தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை நாட்டை 5 பொருளாதார வலயங்களாகப் பிரித்து பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்;

வடக்குக்கிழக்கு,தெற்கில் பாரிய மின் உற்பத்தி நிலையம் மற்றும் தொழிலகங்கள் நிறுவப்படும் என்று தெரிவித்தார்; (உ)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் மூதூரில் மூடப்பட்டன

(கொழும்பு)

மூதூரில் இருந்த அனைத்து அரசசார்பற்ற நிறுவன அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன;

மூதூர் மத்திய கல்லூரியில் இருந்து கணனிகள் காணாமல் போனசம்பவத்தைக்கண்டித்து இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் தாக்கப்பட்டதை அடுத்து அவ் அலுவலகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

இதனையடுத்தே ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களும் தமது அலுவலகத்தை மறு அறிவித்தல் வரை மூடியிருப்பதாக தெரியவந்துள்ளது (உ)

# இராசி பலன்

06/ 10 / 2000
(புரட்டாதி 20, வெள்ளி)
அட்டமி காலை
6.19 வரை
பூராடம்
மு.ப. 10.00 வரை
இராகுகாலம்
10.32- 12.02
சுபநேரம்
6..02- 7.32

மகாநவமி, சரஸ்வதி பூசை

**மேடம்**

கவலைகள் குறைதல், பகைவர்கள் விலகுவார்கள், தேவையற்ற மனக்குழப்பம், உடல் உழைப்பு;

**இடபம்**

எதிர்பாராத பிரச்சினை, உடல் உபாதை, தேவைக்கு உணவு தானாகக்கிடைத்தல், கடன் தொல்லை;

**மிதுனம்**

திருமண விடயம், தனவரவு, போசன சுகம், கௌரவம் பெருகும்;

**கடகம்**

புதிய தொழில் முயற்சி, சந்தோசமான சம்பவம்,பணவருவாய், புதிய பதவி;

**சிங்கம்**

பிறர் மதிக்காமை, காரியத் தாமதம், புத்திரரால் கவலை;

**கன்னி**

பயந்த சுபாவம், நண்பர்கள் நம்பிக்கைக் குறை, செல்வர்கள் விரயம், கௌரவக் குறைவு,

**துலாம்**

தனவரவு, இனிய சம்பவங்கள், பிரயாணம், குடும்ப சுகம்;

**விருச்சிகம்**

வாக்குக் கலகம், காரியத் தாமதம், பொருள் விரயம், மதிப்புக் குறைதல்;

**தனுசு**

புதிய பொருள் வருகை, நிம்மதியான நித்திரை,

# தென்மராட்சி ஆசிரியர்களுக்கு சேவை முன்பயிற்சி கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படவில்லை

(இருபாலை)

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 98-ம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்ற தகுதிகாண் ஆசிரியர்களுக்குரிய சேவை முன் பயிற்சிக் காலத்துக்குரிய கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது;

இதேவேளை இக்கொடுப்பனவு குடாநாட்டின் ஏனைய கல்வி வலய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது;

இக்கொடுப்பனவை பெறாத ஆசிரியர்கள் தமது கொடுப்பனவை விரைவாக வழங்கசம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று வினயமுடன் கேட்டுள்ளனர்; (க-2)

# வடமராட்சி வலயத்தில் தரம் 05புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம்

(புலோலி)

வடமராட்சிவலய பாடசாலைகளின் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின்போது சித்தியடைந்த மாணவர்களின் விபரங்கள் வருமாறு;

நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை25. வடஇந்து மகளிர் கல்லூரி 23, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் 17 தும்பளைசிவப்பிரகாச மகா வித்தியாலயம் 10 கரணவாய்தாமோதரவித்தியாலயம் 07 தம்பசிட்டி மி. த. க. பாடசலை 06 புற்றளை மகாவித்தியாலயம் 05, கரணவாய்வேதாரணிய வித்தியாலயம் 04, மேலைப் புலோலி சைவப்பிரகாசமகா வித்தியாலயம் 03, கம்பர் மலை மெ. மி. த. க. பாடசாலை 03, வல்வைமகளிர் மகாவித்தியாலயம் 03, வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் 03, வதிரிதிரு இருதயக் கல்லூரி 03, ஞானசாரியார் கல்லூரி 03, தேவரையாளி இந்துக்கல்லூரி 03, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் 03 துன்னாலை மெ. மி. த. க. பாடசாலை 03, வல்லை மகளிர்மகா வித்தியாலயம் 03, வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் 03, பருத்தித்துறை சென் தோமஸ் றோ. க. பெ. பாடசாலை 02 புலோலி கிழக்கு அ. த. க. பாடசாலை 02, விக்னேஸ்வரா கல்லூரி 02, கரவெட்டி மேற்கு நாவலர் வித்தியாலயம் 02, வதிரி வடக்கு மெ. மி. த. க. பாடசாலை 02, கெருடாவில் இ. த. க. பாடசாலை 02, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் 02,

கலட்டிறோ க. த. க. பாடசாலை பரு. சித்தி விநாயகர் வித்தியாலயம் திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம் கற்கோவளம் மெ. மி. த. க. பாடசாலை கரணவாய் மணியகாரன்தோட்ட வித்தியாலயம் கரணவாய் மகாவித்தியாலயம் துன்னாலை தெற்கு அ. த. க. பாடசாலை அல்வாய் அம்பாள் வித்தியாலயம் அம்மன் அ. த. க. பாடசாலை செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை உடுத்துறைமகா வித்தியாலயம் மாதனை அ. த. க. பாடசாலை வல்வை சிவகுரு வித்தியாலயம் பொலி கண்டி இ. த. க. பாடசாலை வல்வை அ. த. க. பா. உடுப்பிட்டி அ. மி. த. க. பாடசாலை இமையாணன் அ. த. க. பாடசாலை கம்பர் மலை அ. த. க. பாடசாலை ஆகிய பாடசாலைகளிலிருந்து தலா ஒவ்வொரு மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்; (க-52)

# ஐ. தே. க. தலைவர் ரணில் சிங்கள தேசிய உடையுடன் மேடையில் காட்சிகொடுக்க முடியுமா?

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிங்கள இனத்தின் பாரம்பரிய உடையுடன் மேடையில் தோன்ற முடியுமா?

இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா சிலாபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் சவால் விடுத்துள்ளார்;

ரணில், சிங்கள இனத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் மதிப்பவராக இருந்தால் எமது பாரம்பரிய ஆடையான சாரத்துடனும், பனியனுடனும் பொது மேடைகளில், தோன்றவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்;

இதேவேளை, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பொ நிகழ்வுகளில் தமது பாரம்பரிய ஆடையுடன் தோன்றுவது குறிப்பிடத்தக்கது; (உ)

# அமைச்சு பொறுப்பை ஏற்குமாறு அரசு விடுக்கும் அழைப்பு

வாழ்த்துகின்றோம்

## வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழக
19வது பட்டமளிப்பு விழாவில்
புவியியல் துறையில்
சிறப்புப் பட்டம் பெறும்

### செல்வி சுஜாதா சக்திவேல்

பல்கலைப் பணிதொடர்ந்து பட்டங்கள் பெற்றோங்க வாழ்த்துகின்றோம்.

'வலம்புரிக்குடும்பம்'

(இ-857)

**தனுசு**

புதிய பொருள் வருகை, நிம்மதியான நித்திரை, நினைத்தகாரியம் கைகூடும்.

**மகரம்**

தனவிரயம், கோபத்தினால் கெடுதல், பிரயாணம், சயன சுகக்குறைவு.

**கும்பம்**

தனலாபம், நண்பர்கள் சந்திப்பு, குடும்பசுகம், கீர்த்தி

**மீனம்**

காரியம்சாதித்தல், வயிற்று நோய், தொழில் மேன்மை, அதிகாரம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## அமைச்சுப் பொறுப்பை ஏற்குமாறு அரசு விடுக்கும் அழைப்பு காலம்கடந்த ஒன்றாகும்

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு பதவியைஏற்குமாறு அரசு விடுத்த அழைப்புக் காலம் கடந்து எடுக்கப்பட்ட முடிவென முஸ்லிம் காங்கிரஸ் இணைத்தலைவர்களுள் ஒருவரான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அஷ்ரப் கடந்த மாதம் ஹெலி விபத்தில் பலியான பின்னர், அவ் அமைச்சுப் பொறுப்பை ஏற்குமாறு அரசு விடுத்த கோரிக்கைக்கு மேற்கண்ட மறுப்பினை அவர் வெளியிட்டுள்ளார்.

பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் மேற்படி அமைச்சுப் பொறுப்பு ஏற்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கலாம் எனவும் ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

(உ)




பாராளுமன்றத் தேர்தல் யாழ்.மாவட்டம் 10-10-2000

தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட, தந்தையின் இலட்சியம் வென்றிட, தந்திடுவோம் எம் பொன்னான வாக்குகளை உதயசூரியனுக்கே!

தமிழர் விடுதலைக் கூட்டணி

X

(இ-818)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# இராணுவத்தளபதி அவசர அழைப்பு

(பெல்கிரேட்)

யூகோஸ்லாவிய சுரங்கத் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் இருந்து விடுபட்டு, வழமையான பணிகளை ஆரம்பிக்குமாறு அந்நாட்டு இராணுவத் தளபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும், அரசபிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டிருப்பதையடுத்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

எனினும் உண்மை நிலை குறித்த விபரங்கள் எவையும் திட்டவட்டமாக வெளிவரவில்லை.

கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் உண்மைக்குப் புறம்பானதாக வெளியாகியிருப்பதாகக் கூறி, அந்நாட்டு எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நாடு முழுவதையுமே செயலிழக்கச் செய்யும் போராட்டத்தில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. [உ]

# ரஷ்ய அதிபரின் இந்திய விஜயம்

(பீஜிங்)

ரஷ்ய அதிபர் புட்டினின் இந்திய விஜயம், ஆசிய பிராந்தியத்தில ஸ்திரத்தன்மைக்கு வழி வகுக்கும் என்று சீனா நம்பிக்கை தெரிவித்தது.

நான்குநாள் பயணமாக ரஷ்ய அதிபர் இந்தியா சென்றுள்ளதால் அண்டை நாடுகளான ரஷ்யா, இந்தியா, சீனா மாத்திரமல்ல மற்றும் நாடுகளிடையேயும் ஸ்திரத்தன்மை ஏற்படவாய்ப்புஏற்பட்டிருப்பதாகவும் இது சீனாவிற்கு மிகுந்த மகிழ்வைத் தருவதாகவும் சீன அதிகாரியை மேற்கோள் காட்டி பீக்கிங் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (க-து)

# தமிழகமுன்னாள் தலைமைச்செயலருக்கு நீதிமன்று அழைப்பாணை அனுப்பியது

(சென்னை)

முன்னாள் தமிழகதலைமைச் செயலர் அரிபாஸ்கர் ஊழல் சம்பந்தப்பட்ட வழக்கில் குடும்பத்துடன் நீதிமன்றத்துக்கு அழைக்கபபட்டுள்ளார்.

செல்வி ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தில் குறிப்பாக 86 ஆம் ஆண்டு தொடக்கம் 96 ஆம் ஆண்டு வரைதலைமைச்செயலர்உட்படபலஉயர் பதவிகளை வகித்துவந்த அரிபாஸ்கர் பல ஊழல்களில் ஈடுபட்டாரென்றும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவ்வளை அளவுக்கு மீறி முறைகேடான முறையில் 72 இலட்சம் சேர்த்தாரென்றும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையில் 193 அரசதரப்பு சாட்சியங்கள் பதியப்பட்டனவென்றும் பல்வேறு ஸ்தாபனங்களைச் சேர்ந்த 145ஆவணங்கள்சமர்ப்பிக்கப்பட்டனவென்றும் 2000 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 23ஆம் திகதிக்கு வழக்கினை ஒத்திவைத்த நீதிபதி அரிபாஸ்கரையும் அவரது குடும்பத்தினரையும்அன்றைய தினம் நீதிமன்றத்துக்கு பிரசன்னமாகும்படி உத்தரவிட்டுள்ளார். (து)

## வாழ்த்துகின்றோம்

தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற நீர்வேலி சீ.சீ.த.க பாடசாலை மாணவர்களான செல்வன் கணேசராசா கபிலன்-147 செல்வி கனகரத்தினம் கிஷேந்தி-138 ஆகியோரை வாழ்த்துவதுடன் இவர்களுக்கு கல்வி கற்பித்த அதிபர், மற்றும் ஆசிரியர் குழாத்தையும் இன்றைய ஆசிரியர் தினத்தில் பாராட்டுகின்றோம்.

பிரத்தியேகமாக கல்வி அறிவு ஊட்டிய திருமதி புஷ்பராணி பூரணலிங்கம் (புஷ்பா ரீச்சர்), செல்வி லலீஸ்வரி சிதம்பரம்பிள்ளை ஆகியோரை பாராட்டுகின்றோம்.

கணேசராசா குடும்பத்தினர்
நீர்வேலி வடக்கு
நீர்வேலி

(இ858)

# காஷ்மீர் பிரச்சினைத் தீர்வில் வெளியார் தலையீடு கூடாது

## ரஷ்ய தலைவர் உரை

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் பிரச்சினையில் வெளியார் தலையீடு இருக்கக்கூடாது என்று ரஷ்ய அதிபர் விளாடிமீர்புட்டின் தெரிவித்தார்.

இந்தியப் பாராளுமன்றத்தில் விசேட கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் பயங்கரவாதத்தை முறியடிக்க இந்தியா கூட்டு அடிப்படையில் உலக ரீதியில் செயல்பட்டுவருவதை வரவேற்பதாகவும், இந்தியா பாகிஸ்தான் எல்லைக் கோட்டை நிபந்தனையற்ற முறையில் கடைப்பிடிப்பதையும் சுட்டிக்காட்டி அதைத் தான்வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

காஷ்மீர் விடயத்தில் பாரதத்தின் நிலைப்பாட்டை ரஷ்யா ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் குறிப்பிடுகையில் இந்தியா ஆசியநாடுகளுடன் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற பொழுது பேச்சுவார்த்தைகள் மூலம்தீர்க்கமுயல்வதை அவதானிப்பதாகவும், ஆதரிப்பதாகவும் ரஷ்ய அதிபர் விளாடிமீர்புட்டின் தெரிவித்தார். (து)

## உலக தரிசனம்

### உலகிலே மிகப் பெரிய இரத்தினக் கல்

(கனோஸ்)

உலகிலே மிகப்பெரிய சிவப்பு இரத்தினக்கல் கனோஸில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வருட ஆரம்பத்தில் இக்கல் வட வியட்நாமில் கண்டெடுக்கப்பட்டது.

9 இலட்சம் பெறுமதியான இந்தக்கல் சுமார் 5 இறாத்தல் நிறையுள்ளது. இதனைப் பிரதமர் பான்வான் பாய் தேசியச் சொத்தாகப் பிரகடனப் படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (து)

# ரஷ்ய அமைச்சர் உட்பட மூவரை பாகிஸ்தானுக்குவர அழைப்பு

(இஸ்லாமபாத்)

ரஷ்யா, உஸ்பெக்ஸ்கிஸ்தான், கஜகஸ்தான் போன்ற நாட்டு உள்துறை அமைச்சர்களைத் தனது நாட்டிற்கு வருமாறு பாகிஸ்தான் அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த அழைப்பினை மூன்று நாட்டு அமைச்சர்களும் ஏற்றுக் கொண்டார்களென்று தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் இவர்கள் தங்கும் போது உலகப் பயங்கரவாதம் பற்றி பாகிஸ்தானின் நிலை எடுத்துரைக்கப் படுமென்றும் போதைவஸ்து கடத்தல் பற்றியகருத்துக்கள் ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்நாட்டு அமைச்சர்களுடன் சட்ட விரோதக் குடியேற்றங்கள் பற்றி விரிவாக ஆராயப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# முதறிஞர்களை கௌரவிக்க ஏற்பாடு


(சென்னை)

நெல்லை மாவட்டத்தில் 6வது உலகத் தமிழ்ப் பெருவிழா நடைபெற இருக்கிறது.

நவம்பர் 1ம் திகதி தமிழமொழி வழி நாளில் நடைபெறும் இவ்விழாவில் உரையரங்கு, கலையரங்கு கவியரங்கு என்பன இடம் பெறுவதுடன் முது பெரும் தமிழ் அறிஞர்களான தி.க.சிவசங்கரன் தெ. பொ.சி.ரகுநாதன் போன்றவர்கள் கௌரவிக்கப்படவிருக்கிறார்கள். இவ்விழா றோஸ்மகாலில் நடைபெறஇருப்பது குறிப்பிடத்தக்கது. (து)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
பாராளுமன்ற பொதுத் தேர்தல் யாழ். மாவட்டம் 2000







தமிழினத்திற்காக தன்னுயிரை நீத்த அமரர் மாமனிதர்
குமார் பொன்னம்பலம்

2 X

அப்பாத்துரை விநாயகமூர்த்தி
(சட்டத்தரணி)

தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா

( இ 884 )

பாராட்டுகின்றோம்.

கணேசராசா குடும்பத்தினர்
நீர்வேலி வடக்கு
நீர்வேலி

(இ858)

தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா

(இ 884)

# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2000-10-10

யாழ்ப்பாணம்
தேர்தல் மாவட்டம்

1987 ல் இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்கள் இருக்கும் இடம்தேடி சங்கக்கிளைகளைத் திறந்து மக்களுக்கு உதவி செய்த

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்

## திரு. சி. சிவமகாராசா அவர்களை ஆதரிப்போம்!

## தமிழர் விடுதலைக் கூட்டணி

X

11

(இ-858)

இலங்கை முழுவதும், சூரியகந்த முதல் செம்மணி வரை

அரச பயங்கரவாதத்துக்கு எதிராகவும்
பேரினவாதத்தையும், யுத்தத்தையும்
உளப்பூர்வமாக எதிர்க்கும், தமிழ் மக்களின்
சுயநிர்ணய உரிமையை
வலியுறுத்தும் மக்கள் சக்தியை பலப்படுத்த
வாக்களிப்போம்;

X

ஜனநாயக
இடதுசாரி முன்னணி
முதன்மைவேட்பாளர்

## சி. கா. செந்திவேல்

சட்டத்தரணி

## சோ. தேவராஜா

(1803)

நாள் தொறும் நாடி முறை
செய்யா மன்னவன்
நாள் தொறும் நாடு கெடும்.

- குறள் -

## வலம்புரி

### ஆசிரியத்துவம்

ஒக்டோபர் 6 ஆம்திகதி உலக ஆசிரியர் தினம் அஞ்ஞானமெனும் இருள கற்றி மெய்யான அறிவைத் தந்த ஆசிரியர்களை ஒருநாளாவது நன்றியுடன் நினைவு கூர வேண்டுமென்பதற்காக சர்வதேசம் அதற்கென ஒரு நாளை ஒதுக்கி நன்றியைச் செலுத்துகிறது.

மேலைத்தேய பண்பாட்டில் ஆசிரியரும், மாணவனும் நண்பர்களாக நடந்து கொண்டனர். இதனால் அங்கு ஆசிரியருக்கு மாணவர்வழங்கும் மதிப்பு தரம் குறைந்ததாகவே காணப்பட்டது. இந்நிலையை நீக்கவே உலக ஆசிரியர் தினத்தைஉருவாக்கி ஆசிரியர் மீது மாணவர் செலுத்தும் மதிப்பை உயர்த்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இது விடயத்தில்தமிழர்பண்பாடுவித்தியாசமானது. தமிழர்கள் தம்ஆசான்களைஎன்றுமே நன்றியோடு நினைப்பவர்கள், மதிப்பவர்கள் ஆனால் இத்தகைய தமிழர் பண்பாட்டின் பெருமைக்குரிய மதிப்பும் மரியாதையும் சமகாலத்து மாணவர்களிடம் இல்லையே என்ற ஆதங்கம் ஆசிரியர்களிடமும்அறிஞர்களிடமும் இருக்கவே செய்கிறது.

ஆசிரியர்களிடம் நேருக்கு நேர் நின்று விவாதம் புரியுமமாணவர்களும் ஆசிரியர்களை வீதிகளில் காணும்போது பாடசாலைகளில் மட்டும்தான் ஆசிரியர் என்ற மனோ நிலையில் முறையில் நடந்துகொள்ளும் மாணவர்களும் இன்று நம் மத்தியில் இருக்கவே செய்கிறார்கள்.

காலம் காலமாக கட்

# மாணவ சமுதாயத்தின் இலட்சிய நாயகர்

# நல்லாசிரியனே! காலத்தால் அழியாது அவன்பணி

திருமதி அனுஷியா சத்தியசீலன் M. hil
விரிவுரையாளர் கல்வியியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்

இன்று உலக ஆசிரியர் தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுர மாகிறது

ஆ—ர்

இன்று ஒக்டோபர் 6 ஆம் நாள். உலக ஆசிரியர் தினமாகும். ஆசிரியன் என்பவன் கற்பித்தலுக்கு மட்டும் உரியவன் என்ற நிலை இன்று மாற்றமுற்று காலத்திற்கூடான பரிணாம வளர்ச்சியில் மாணவ, சமூக வழிகாட்டியாக, மாற்றத்தின் முகவராக நீதிபதியாக, சமூக இணைப்பாளனாகக், கற்பித்தல், தொழில் நுட்ப நிபுணனாக உளவியல் நிபுணனாகப் பல்வேறு பாத்திரங்களையும் ஏற்றுச் சமூகத்தில் தோற்றமளிக்கின்றான்.

தன்னுடைய பல்வேறு பரிமாணங்களையும் சமிவர உணர்ந்து, நல்ல மனப்பாங்குடன் அவற்றை ஏற்றுச் செயற்படுபவனே இன்று ஆசிரியத்துவத்திற்குப் பெருமை சேர்ப்பவனாக, மாணவ குமாத்தால், சமூகத்தால் மதித்துப் போற்றப்படுபவனாகத் திகழ்கின்றார்.

### ஆசிரியத்துவம்

ஓர் இலட்சிய ஆசிரியன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்பதில் காலத்திற்கூடாக மாறுபட்ட சமூகங்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் இருந்து வந்துள்ளன. இரேக்க மரபில் ஆசிரியன் கற்பனை நிறைந்த கவிஞன் போலவும், சிந்தனை செறிந்த ஞானி போலவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டான். சிந்தனைச் சுதந்திரமுள்ளவனாகவும், எதனையும் ஆழமாகச் சிந்திக்கும்போக்குடையவனாகவும்விளங்கும் ஆசிரியன் தன்னிடம் பயிலும் மாணவர்களை அத்தகைய வளர்ச்சிக்கும்,பக்குவத்திற்கும்கொண்டு வருவான் என எதிர்பார்க்கப்பட்டது. உரோம மரபில் ஆசிரியன் கட்டுப்பாட்டிற்கும், ஒழுக்கத்திற்கும் உரியவனாகக் கருதப்பட்டான். ஐக்கிய அமெரிக்க நாட்டினர் நல்லவனாக, அறிவு ஆற்றலுடையவனாக ஆசிரியரை நோக்கினர். ஆங்கிலேயர் அறிவு ஆற்றலுடன் பரந்த ஈடுபாடுகள் பலகொண்டவனாக ஆசிரியனைக் கண்டனர்.

தத்துவஞானி ரூசோ 'ஆசிரியன் போதனையிலும், சாதனையிலும் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவருக்கு வழிகாட்டுவதும் ஊக்குவிப்பதும அவன் கடமை'' என்றார். அதிகாரியாகத் தன்னைக் கருதிக் கொள்ளாமல் வழிகாட்டியாக, ஆலோசகனாகத் தன்னைக் கருதிக் கொண்டு மாணவர்களை நெறிப்படுத்துவதே ஆசிரியத்துவத்திற்கு சிறப்பானது என்றார் சிந்தனையாளர் டுயீ. மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் நல்ல உணர்வுகளை வெளிக் கொணர்வது ஆசிரியம் என்றார் சுவாமி விபுலானந்தர். மேற்கூறப்பட்டவாறு காலத்திற்கூடாகப் பல்வேறு சமூகங்களிடையே, கல்விச் சிந்தனையாளரிடையே ஆசிரியன் எப்படிப்பட்டவன், ஆசிரியத்துவம் எப்படிப்பட்டது என்பது பற்றிய கருத்துக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. ஆயினும் அவை யாவும் அடிப்படையில் ஆசிரியனைக் கற்பித்தலுக்கு மட்டும் உரியவனாகக் கருதிக் கொள்ளாமல் நல்லவனாக, வல்லவனாக, இதர பல ஈடுபாடுகள் கொண்டவனாக, மாணவ சமூகவழிகாட்டியாக, சமூகச் சிற்பியாகக் காண விழைந்தமை கண்கூடு. தமிழர் மரபும் ''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவன்'' என்றும் ''மாதா, பிதா, குரு, தெய்வம் ''எனவும் உயர்நிலையில் வைத்து ஆசிரியனைச் சிறப்பித்தது.

### ஆசிரிய மாணவ நல் உறவு

தன்னுடையபலவேறு பாத்திரங்களையும சரிவர உணர்ந்து நல்ல மனப் பாங்குடன் அவற்றை ஏற்றுச் செயற்படுகின்ற போதுதான் ஆசிரியன் பூரணத்துவம் அடைகின்றான். அந்தப் பூரணத்துவத்திற்கு ஆணிவேராக அமைவது ஆசிரிய மாணவ நல்லுறவாகும்.

ஏனென்றால ஆசிரியன் ஏற்கும் அத்தனை பாத்திரங்களும் மாணவன், மாணவ சமூகம் சார்ந்தனவாக அல்லது மாணவசமூகத்தினூடே பெற்றுக் கொள்ளப்பட்ட இதர சமூக தொடர்புகள் சார்ந்தனவாகப் பெருமளவில் அமைந்து விடுகின்றன. எனவே ஆசிரியத்துவம் முழுமை பெறுவதற்கு ஆசிரியன தன் சகல கடப்பாடுகளும் சிறந்தவையாக இருந்தாலும், நிர்வாகம் எவ்வளவு ஆற்றல்வாய்ந்ததாக இருந்தாலும், உபகரணங்கள் எவ்வளவு ஏராளமானவையாகக் காலத்திற்கு ஏற்றவையாக இருந்தாலும், கல்விஒழுங்கு அமைப்புக்கள் எவ்வளவு சீரானவையாக இருந்தாலும் அவற்றால பிள்ளைகள் அடையும்பலன் ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளது...... அதற்கு ஆசிரிய-மாணவ உறவு விரும்பத்தக்கதாக அமைய வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

அதுபற்றிக் கூறவந்த இரவீந்திரநாத் தாகூர் 'மாணவனின் வாழ்க்கைக்காவியம் ஆசிரியரின் இலட்சியபாதையிலிருந்து எழ வேண்டும், ஆசிரியனே சிந்தனைச்சிற்பி. ஆசிரியர் - மாணவர் தொடர்பு மகத்தானது. இருவர் இதயமும் கலந்து உறவாடவேண்டும்' என்றார். மேலும் அவுஸ்ரேலிய அறிஞரான றாபேப்ல்வ் [ஸ்ரெய்னர் அதுபற்றிக் குறிப்பிடுகையில் 'ஓர் ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் இடையிலான இயக்கம், ஒத்திசைவு, அன்பு ஆகியவற்றின் முழுமையான தொடர்பாடலே கல்வி இலக்குகளை அடைய உதவும் இரகசியமாகும்' என்றுகூறி நல்லுறவினை வலியுறுத்தினார்.

### குற்றம்களைதல்

ஆசிரிய-மாணவ உறவு இனிதாக, விரும்பத்தக்கதாக அமைகிற போது மட்டுமே ஆசிரியத்துவம் வெற்றி காணமுடியும். ஆசிரியன் என்றால் ஆசு+இரியன் அதாவது குற்றம்+களைபவன் என்றே பொருள் கொள்ளப்படுகின்றது. மாணவர் குற்றங்கள், விரும்பத்தகாத நடத்தைகள் களையப்பட வேண்டியது கட்டாயமானதும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும். அப்போதுதான் ஆசிரியன் மாணவ சமுதாயத்தின் வழிகாட்டியாக மாணவ சமூகத்தின் சிற்பியாகத் தனக்குரிய பங்கினை நிறைவேற்றமுடியும். ஆனால் குறைபாடுகளைக் களைய பின்பற்றும் வழிமுறைகளிற்தான் ஆசிரியத்துவம் பெருமை காண்கின்றது. மாணவர்களைத் தூரவிலத்தி வைத்தும் அதிகம் ஆகவே உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற நிலையில் அல்லாமல் ஒத்த நிலையினர், நல்லதோர் நண்பர்கள்என்ற நிலையில் செயற்படும்போது அந்த வழிகாட்டலை மாணவ சமூகம் ஏற்றுக்கொள்கின்றது. அதற்குத் தலைசாய்கின்றது.

தன்பொறுப்பில் உள்ள மாணவர்களை இன்றும், என்றும் சமுதாயத்தில் உகிக்கப்போகும் இடத்தினை நிறைவாக; சிறப்பாக ஆற்றக்கூடியவர்களாக அவர்களை ஆக்கவேண்டிய பொறுப்பின் பெரும்பங்கு ஆசிரியனைச் சார்ந்தது. அப்பங்கினை முழுமை பெறச் செய்வதற்கு மாணவ சமுகத்தில்தன்னைப் பற்றிய நம்பிக்கை ஏற்படச் செய்தல் வேண்டும்.

''சமன் செய்து சீர் தூக்கும்
கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்
கணி''

என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்ப ஆசிரியன் எப்போதும் நடுநிலையாளனாகச் செயற்படப்பழகிக் கொள்ள வேண்டும். அதன் மூலம் மாணவன் நம்பிக்கை, நெருக்கம் உருவாக்கப்பட்டு இருவழித் தொடர்பும், இடையினையுறவும் புரிந்துணர்வுடன் கூடியதாக, வரவேற்கத்தக்கதாக அமைய வழிகாணப்படுகிறது. மாணவபருவம் அன்பு, கணிப்பு, மதிப்பு, காப்பு போன்ற பல்வேறுசமூக, உளவியல் தேவைகளை மிகமிக எதிர்பார்க்கும் பருவமாகும். அதனால் ஆசிரியன் அவற்றை ஈடுசெய்யும் உளவியலாளனாகப் புரிந்துணர்வுடன் செயலாற்றும் போதுதான் ஆசிரியத்துவம் வெற்றி காண முடிகிறது

கற்பித்தற்குருவாக மட்டுமன்றி மாணவ வழிகாட்டியாக, மாணவ உளவியலாளனாகச் செயற்பட்டு நல்லதோர் மாணவ சமூகத்தை உருவாக்குபவனாக, அதனூடாக நாட்டிற்கு நல்லதோர் எதிர்காலப் பிரஜைகளை உருவாக்கிக் கொடுப்பவனாக ஆசிரியன் இன்று பல்வேறு எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பெருங் கடமையில் ஈடுபட்டிருக்கின்றான். ஆசிரியத்துவத்தின் பெருமையை நிலை நாட்டியவர்களாக/நிலைநாட்டிக்கொண்டிருப்பவர்களாக சிலர் எம் மண்ணில் வாழ்ந்தார்கள்/வாழ்கின்றார்கள். நாம் அனைவரும் அவ்வழியில்

வர்களும் இன்று நம் மத்தியில் இருக்கவே செய்கிறார்கள்.

காலம் காலமாக கட்டிக்காக்கப்பட்ட ஆசிரியர் மாணவர் உறவில் இத்தகையவொரு திடீர் மாற்றம் ஏற்பட்டதற்கு தனியே மாணவர்கள் மட்டும் காரணமல்ல. என்று ''ரியூட்டரிக் கலாசாரம்'' நம் மண்ணில் முளைவிட்டு காசுக்கல்வி விற்பனையானதோ அன்றே ஆசிரியர், மாணவர் உறவிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கிற்று.

வியாபாரப் போட்டி காரணமாக ஒரு ஆசிரியரை சக ஆசிரியர் மாணவர்கள் முன் தூற்றும்போது அதே மாணவர்களிடமிருந்து மதிப்பை மரியாதையை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளவோ, எதிர்பார்க்கவோ முடியாது.

இந்நிலை மாறவேண்டுமாயின் ஆசிரியர்கள் தம் கடமையிலும், செயலிலும் கரிசனை உள்ளவர்களாக இருந்து மாணவ சமூகத்தை நல்வழிப் படுத்தமுன்வரவேண்டும்.

இதுவே நாம் காணும் உண்மை நிலையாகும். ரியூட்டறிகள் மாதிரிப் பாடசாலைகளாக மாறிவரும் போது பாடசாலை ஆசிரியர்கள் இரண்டாந்தர ஆசான்களாக தள்ளப்படும் நிலையை தடுக்க ஆசிரியர்களின் விரைவான கனதியான செயற்பாடுகள் மிகமிக அவசியம்.

ரியனைக் கண்டனர்.

தத்துவஞானி ரூசோ 'ஆசிரியன் போதனையிலும், சாதனையிலும் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுடன் எல்லாத்துறைகளிலும் தலைசிறந்த அறிஞனாக விளங்க வேண்டும். அவன் மற்றவர் துன்பத்தைத் துடைத்தெறியும் தூய உள்ளத்தை மாணவர்களிடம் வளர்க்கவேண்டும்'' என்றார். குழந்தை கல்விச் சிந்தனையாளர் மொன்டசூரி அம்மையாரோ ''ஆசிரியன் பிள்ளைகளிடம் அன்னையைப் போல அதிக அக்கறை காட்ட வேண்டும்... ஒரு பிள்ளையை உருவாக்குவது ஆசிரியனே: ஆசிரியனின் பணி கற்பித்தல் அல்ல. இயக்குபவனாக இருந்து பிள்ளைக

[illegible]

வில் அமைந்து விடுகின்றன. எனவே ஆசிரியத்துவம் முழுமை பெறுவதற்கு ஆசிரியன தன் சகல கடப்பாடுகளையும் செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஆசிரிய-மாணவ உறவு புரிந்துணர்வுடன் கூடியதாக சிறப்பானதாக அமையவேண்டியது மிக மிக அவசியமானதும், வேண்டப்படுவதுமாகும்.

ஆசிரிய-மாணவ உறவு பற்றி பேராசிரியர் வ. ஆறுமுகம் தனது 'கல்விப் பாரம்பரியங்கள்' என்ற நூலில் குறிப்பிடுவது இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது. 'ஆசிரிய-மாணவ உறவு ஒரு நெருக்கமான தொடர்பு. அது வேறுஎவருடைய தலையீட்டுக்கும் உட்படாத, உட்படுத்தப்படக்கூடாத உறவாகும். அத்தொடர்புக் கூடாகச் செயல் வடிவம்பெறும் பரிசோதனை தமக்கெனத் தனித்துவத்தைக் கொண்ட ஆசிரிய-மாணவ பங்காளிகளின் முயற்சியேயாகும். ஆசிரியன் தன் சொல்லாலும், செயலாலும் தனது மாணவர்களிடையே ஆர்வம், நம்பிக்கை, மதிப்பு என்பவற்றை வளர்க்கும் திறனில் அது தங்கியுள்ளது. அந்த உறவே ஆசிரியத்துவத்தின் உயிர்நாடி என்றார். சிந்தனையாளர் சுகோம்லின்ஸ்கி அவ்வுறவின் அவசியத்தை வலியுறுத்துகையில் நோக்கங்கள் எவ்வ

[illegible]

பின்பற்றும் வழிமுறைகளிற் தான் ஆசிரியத்துவம் பெருமை காண்கின்றது, மாணவர்களைத் தூரவிலத்தி வைத்து உயர் அதிகாரியாகமாணவனினின்றும் வேறுபட்டவனாகக் களைய முற்படும்போது அதன் விளைவுகள் ஆசிரியனை மட்டுமன்றி மாணவனை, மாணவ சமூகத்தைக் காயப்படுத்தி விடுகின்றன: அங்கு ஆசிரியத்துவம் தன் பொலிவை இழக்கின்றது. அவ்வாறின்றி மாணவனது நிறைவுகளைப்போற்றி குறைகளைக் களைய முயற்சிக்கும் போதும், மாணவனை நண்பனாகக்கொண்டு வழிகாட்ட முற்படும்போதும் இருசாராரும் பெறும் வெற்றிகளும் பலவாக அமைந்துவிடுகின்றன.

அங்கு ஆசிரியத்துவம் ஒளி பெறுகின்றது. இங்கு ஆசிரியன் தன்னை மாணவனுடன் ஒத்தவனெனக் காட்டிக் கொள்கிறான். ஆயினும் ஆசிரியன் தம்மிலும் மேலானவன் என்பதனை மாணவசமூகம் தாமாகஉணர்ந்து மதிப்பளிக்கின்றது. மாணவ சமூகத்தின் குறைநிறைகளில் பெற்றவர்களைவிட ஆசிரியனுக்கே அதிக பங்குள்ளது. இன்றையசூழலில் பிள்ளை ஆசிரியனுடன் செலவிடும் நேரம் அதிகம் ஆசிரியனைப் ''போலச் செய்தலில்'' பிள்ளைகாட்டும் அக்கறை

[illegible]

டிருப்பவர்களாக சிலர் எம் மண்ணில் வாழ்ந்தார்கள்/வாழ்கின்றார்கள். நாம் அனைவரும் அவ்வழியில் நடந்து நம்மையும் நாட்டையும் உயர்த்த வேண்டும்.

(க)

## கௌரி விரதம்

(யாழ்ப்பாணம்)

வல்லை ஸ்ரீ வாலாம்பிகா சமேதவைத்தீஸ்வர சுவாமி கேதார கௌரி விரத விழா நாளை மறுதினம் 7 ஆந்திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 21 நாட்கள் நடைபெற்று இம்மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காப்புக்கள் வழங்கப்படும்.

அன்று ஆஸ்தான வித்துவான் எம். பி. கோவிந்தராஜன் குழுவினரதும், இணுவில் என். ஆர். கே. இரத்தினகுமார் வாகீஸ்வரன் குழுவினரதும் நாதஸ்வர இசை வழங்கப்படும்.

(த)

## நூல் அறிமுக

அருணோதயார் கல்லூரி ஆசிரியர் பெ. அமிர்தலிங்கம் எழுதிய பூகோள சுற்றாடல் பிரச்சினைகள் என்ற நூலின் அறிமுக விழா இன்று முற்பகல 10.39 மணிக்கு அதிபர் கா. மகேந்திரராஜா தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

(ந)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்கு

# தமிழ் சமூகம் தலை வணங்குகிறது!

## டக்ளஸ் தேவானந்தா வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா வாழ்த்துச் செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:

தொடர்கின்ற யுத்தச் சூழ்நிலையிலும், எமது தேசத்தின் எதிர் காலச் சமூகத்தை வடிவமைப்பதில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்ற தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கு உலக ஆசிரியர் தினமாகிய இன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சமூக அர்ப்பணிப்புக்களை ஆக்கி எறிந்து விட்டு உழைப்பிற்காக எமது மண்ணை விட்டு பல ஆசிரியர்கள் வெளிநாடு சென்றுள்ள நிலையிலும், தொடரும் யுத்தச் சூழலையும் மீறி எமது மண்ணில் கால் பதித்து எமது கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பாடுபட்டு வரும் சகலதரப்பு ஆசிரியர்களுக்கும் முன்னே நாம் தலை வணங்குகின்றோம்.

ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளுக்கும் தமிழ் சமூகத்தின் கல்வியியற்செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தி பெருவளர்ச்சி கண்டிட எமது கடந்தகால அரசியற் செயற்பாடுகளினூடாக பங்கு கொண்டமை குறித்துப் பெருமிதம் கொள்கின்றோம்.

யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்திருந்த பாடசாலைகளின் புனரமைப்பு, புதிய கட்டடங்கள் அமைத்தல், பாடசாலைத் தளபாடங்கள்: உபகரணங்கள் வழங்கியமை, கணனிகள் வழங்கப்பட்டமை, ஆசிரியர்களுடைய நியமனம், இடமாற்றம், சம்பளப் பிரச்சினைகள் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் கையாண்டிருந்தோம்.

இவை தவிர உயர் தொழில் நுட்ப நிறுவனம், தேசிய கல்வியியற் கல்லூரி, ஒரு கல்வி வலயமாக இருந்த யாழ்ப்பாணக் கல்வி வலயம் ஐந்து கல்வி வலயங்களாகப் பிரிக்கப்பட்டமை உட்பட பல்கலைக் கழகம், திறந்த பல்கலைக்கழகம், தொழில் நுட்பக்கல்லூரி போன்ற அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் ஈ.பி.டி.பி. தனது வேலைத் திட்டங்களில் முன்னுரிமை அளித்துச் செயற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சகல பாலர் பாடசாலைகளின் புனரமைப்பிலும் ஈ.பி.டி.பி. கவனம் செலுத்தி வருகின்றது: இதுவரை காலமும் தமிழ் சமூகத்தின் கல்வி நிலையில் கவனம் செலுத்தி வந்தது போல் எதிர்காலத்திலும் எமது கல்வியை மேலும் நல்நிலைக்குக் கொண்டுவர பல்வேறு திட்டங்கள் முன்வைத்துள்ளது. இத் திட்டங்களில் சில ஈ.பி.டி.பியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

எமது தமிழ்ச் சமூகம் கல்வியில் ஆரோக்கியமான நிலையை எய்திட மேலும் மேலும் இதய சுத்தியான அர்ப்பணிப்புடன் பணியாற்ற உறுதி பூண்டுள்ள ஈ.பி.டி.பி.யினையும் ஆசிரியர் குழாம் உட்பட அனைத்து கல்விச் சமூகமும் ஆதரவு தரவேண்டும் என்றும் உலக ஆசிரியர் தினத்தில் ஈ.பி.டி.பி. கேட்டுக்கொள்கின்றது என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கஸ்தூரியார்...

யைசேர்ந்த சண்முகரட்ணராஜமாதுமையாள் வயது 21 நவாலி மானிப்பாயைச் சேர்ந்த சின்னராசா அனஸ்ரிக்கா வயது 21 யாழ்ப்பாணம் கேசாவில் வீதியைச்சேர்ந்த பொன்னையா ஜெகநாதன் (வயது 49) ஆகிய மூவருமே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

இக் கிரனைற் வீச்சு சம்பவத்தையடுத்து தொலை பேசி வயர்கள் துண்டிக்கப்பட்டன இராணுவத்தினர் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

இதேவேளை இச் சம்பவம் இடம் பெற்ற இடத்திலிருந்து இராணுவ ட்ரக் வாகனம் ஒன்று புறப்பட்ட சில நிமிடங்களில் இச்சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப் படுகிறது. (வ-12)

### யாழ் மாவட்ட...

வி.எஸ் சொக்கலிங்கம், வட பிராந்திய மின்சார சபை பொது முகாமையாளர் எஸ். முத்துரட்ணானந்தம் மற்றும் குடாநாட்டின் படை உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

இம்மகாநாட்டில் யாழ். மாவட்ட தேர்தல் தொடர்பாக தேர்தல் தினத்திற்கு முன் 9ஆம் திகதி தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களையும் வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதற்கு இணங்க 89 பஸ்களை வட பிராந்திய போக்குவரத்துச் சபை சேவையில் ஈடுபடுத்த முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வாக்காளர்களை காலை 7 மணிக்கு முதல் மாலை 4மணி வரை பஸ்ஸில் இலவசமாக ஏற்றி இறக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்காளர்களை வாக்களிப்பு நிலையங்களுக்கு ஏற்றிச்செல்ல போக்குவரத்து பஸ்வண்டிகளும் தனியார் பஸ்களும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (வ)

### கொக்குவில்...

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இக்கிரனேட் வீச்சு சம்பவம் கொக்குவில் பூநாறிமரத்தடியில் நேற்று நண்பகல் இடம் பெற்றுள்ளது கிரனேட் வீச்சு சம்பவம் நடந்த இடத்தில் வாகனத்தின் கண்ணாடிகள்

ஆரம்பம் : 06 - 06 - 75

DEVI PRINTERS JAFFNA

போன் : 2789

இன்று 3 மணிக்கு நடைபெறும் எமது

வெள்ளி விழாவுக்கு

வர்த்தகப்பெருமக்கள், அன்பர்கள்,

## விளையாட்டுச் செய்தி

## பங்களாதேஷ் அணியை இங்கிலாந்து அணி வென்றது

நைரோபியில் நடைபெறும் மினி உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை இங்கிலாந்து அணி வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 8விக்கெற்றை இழந்து 232 ஓட்டங்களை பெற்றது இரண்டாவதாக களமிறங்கிய இங்கிலாந்து அணி 2விக்கெற்றுகளை மட்டுமிழந்து 236ஓட்டங்களை பெற்றது 6விக்கெற் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றியீட்டியுள்ளது.

இன்று இந்தியா அணியும் நைஜீரியா அணியும் மோதவுள்ளன. (வ-வி)

## பழநெடுமாறனின் "தமிழீழ" நூல் மாநில மாநாட்டில் வெளியிடப்பட்டது

### வீரப்பனின் மனைவியும் கலந்து கொண்டார்

தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் எழுதிய "தமிழீழமும் வங்க வங்கமும்" என்ற நூலும் "பாலஸ்தீன விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்" என்ற இரு நூல்களும் அண்மையில் வெளியிடப்பட்டது.

தமிழ் நாட்டில் நடந்த மாநில மாநாட்டிலேயே இவ்விரு நூல்களும் வெளியிடப்பட்டது இந்நூல் வெளியீட்டில் சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமியும் கலத்து கொண்டார்.

இம்மாநாட்டில் புலிகளைப் பற்றி அனைவரும் புகழ்ந்து பேசியதுடன் இந்தியா புலிகள் மீது விதித்துள்ள தடையை உடனடியாக விலக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். (ந)

### வ. இ. போ. ச...

அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் வழங்கிய உறுதிமொழியை அடுத்து உண்ணாவிரதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

போக்குவரத்துச் சபை ஊழியர்களின் உண்ணாவிரதம் நேற்று யாழ்.பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

1997, 1999 ஆகிய இரு வருடங்களுக்குரிய இடர் காலக் கொடுப்பனவு இது வரை வழங்கப்படாமையினாலேயே சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை இவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பாக புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பௌசியுடனும், போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் டுணல் ஸ்ரீவர்த்தனாவுடனும் தொடர்பு கொண்டபோது ஒரு மாத காலத்துக்குள் இக் கொடுப்பனவை வழங்க சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழரசம் கொடுத்து உண்ணாவிரதத்தை சித்தார்த்தன் முடித்துவைத்தார். (வ-12)

### பொலிஸார்...

தலைமையகம் அறிவித்துள்ளது.

### பிரச்சாரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவர் ஆலய முன்றலில் நாளைக் காலை 10மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரச்சாரக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. (வ)

### ரோந்து...

தனர்.

இத் தாக்குதல் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது அம்பாறை நகரிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தனிப்பாலைமைஎனும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

இத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸார் அம்பாறை மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை பொலிஸாரின் பதில் தாக்குதலில் ஒரு புலி உறுப்பினர் கொல்லப்பட்டதாகவும் அவரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கியொன்று மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-2)

### காரைநகர்...

றன்கல்லூரி சுந்தர மூர்த்தி வித்தியாலயம் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு கடற்படை அதிகாரிகள் சில அறிவுறுத்தல்களை வழங்கிய பின் வீடு செல்ல அனுமதித்தார்கள்.

இச் சுற்றி வளைப்பு சம்ப

# வெள்ளி விழாவுக்கு

வர்த்தகப்பெருமக்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

## தேவி அச்சகம்

114/19, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.
( தேவி அச்சக ஒழுங்கை )


கொக்குவில் பூநாறுமரத்தடியில் நேற்று நண்பகல்இடம் பெற்றுள்ளது கிரனேட் வீச்சு சம்பவம் நடந்த இடத்தில் வாகனத்தின் கண்ணாடிகள் நொருங்கிக்கிடக்கக் காணப்பட்டன.

இச்சம்பவத்தில்கனகசிங்கம் தீபன் (வயது 19), தர்மகுலசிங்கம் தர்மசீலன் (வயது 20) நவாலி, செல்லத்துரை குணசேகரம் (வயது 19) புன்னாலைக்கட்டுவன் ஆகியோரே காயப்பட்டவர்களாவர். ( 12ஊது:

முடித்துவைத்தார். (வ-12)

## பொலிஸார்...

தலைமையகம் அறிவித்துள்ளது.

வன்முறை தொடர்பான முறைப்பாடுகளை ஏற்கமறுக்கும் பொலிஸார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் இந்நடைமுறை தொடர்ந்தும் அமுலிலிருக்குமென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள் (வ - 4)


அங்கு கடற்படை அதிகாரிகள் சில அறிவுறுத்தல்களை வழங்கிய பின் வீடு செல்ல அனுமதித்தார்கள்.

இச் சுற்றி வளைப்பு சம்பவத்தின் போது அங்குள்ள மக்கள் மத்தியில்ஈ. பி .ஆர் . எல் ஊ எவ் சுரேஸ் அணியினர் பிரசாரத்தை மேற்கொள்ள முயற்சித்தபோதுவேட்பாளர் உருத்திர மூர்த்தி கடற்படை அதிகாரியினால் தாக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வ-5)


## உங்கள் வாக்கு வீணைக்கே!

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்

அன்று-தீவகத்தில் நிவாரணம்
பனைமரத்திற்கா
வழங்கப் போகின்றார்கள் - என்றார்கள்!
இன்று- அந்தப் பனைமரங்களிடமா
வாக்குப்பிச்சை கேட்கின்றார்கள்!



## (ஈ. பி. டி. பி)

தீவகஅபிவிருத்திக்காக ஈ. பி. டி. பி யினால் வென்றெடுக்கப்பட்ட வேலணைப் பிரதேச சபையினால்,
இவ்வாண்டு ஒரு கோடியே 14இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தித்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளது.



இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அச்சக அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 06ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.